# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 08 அதிர்வு 88 ஐப்பசி 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162










படம் : சுமித்ரா விக்னநேந்திரா










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day
bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au



# ரத்தன் டாடா; அடக்கமான ஆளுமை

● ஆர்.சுகந்தன்

இந்தியத் தொழிலதிபர் ரத்தன் டாடா காலமாகிவிட்டார். இவர் ஒரு தொழில அதிபர் தானே, தொழிலதிபர் என்றால் ஒரு பெரும் முதலாளி தானே, அவருக்கு நாம் ஏன் வருந்த வேண்டும், என்று நீங்கள் நினைக்கலாம், நியாயம் தான். ஆனால் இந்த தொழில் குழுமம் சற்று வித்தியாசமானது.

ரத்தன் டாடா 1937ஆம் ஆண்டு மும்பையில் பிறந்தார். அவரது தந்தை ஜாம்ஷெட்ஜி டாடாவின் பேரனான நாவல் டாடா. கடந்த 1955ஆம் ஆண்டு ரத்தன் டாடாவுக்கு 17 வயதானபோது, கட்டுமானமும் பொறியியலும் கற்க அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். உயர்கல்விக்குப் பிறகு, 1962ஆம் ஆண்டு டாடா நிறுவனத்தில் உதவியாளரகச் சேர்ந்தார். அதில் பல பதவிகளை வகித்த பின் 1974-இல் டாடா நிறுவனத்தின் தலைவரானார். 2012ஆம் ஆண்டு, 50 ஆண்டுகள் டாடா குழுமத்தின் தலைவராக இருந்தபின்னர், அவர் அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். அதன்பின் டாடா சன்ஸ்-இன் கௌரவத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

> **அதானி போலவோ அம்பானி போலவோ ஆர்ப்பாட்டம் செய்யாமல், அடக்கமாக இருப்பது எப்படி என்பதற்கு ரத்தன் டாடா முன்னோடி. அதனால் அவர் நல்லவராகத் தோற்றமளிக்கிறார்.**

டாடா குழுமத்தின் தலைவராக ரத்தன் டாடா இருந்த காலத்தில், ஆங்கிலோ-டச்சு எஃகு உற்பத்தியாளர் கோரஸ், பிரிட்டனைச் சேர்ந்த கார் பிராண்டுகளான ஜாகுவார், லேண்ட் ரோவர், மற்றும் உலகின் இரண்டாவது பெரிய தேயிலை நிறுவனமான டெட்லி ஆகியவை உட்பட பல பெரிய நிறுவனங்களை டாடா குழுமம் தன்வசப்படுத்தியது. நாம் சமையலில் பயன்படுத்தும் உப்பு முதல் உலகின் விலை உயர்ந்த கார் வரை டாடா நிறுவனம் இல்லாத துறையே இல்லை. இந்தியாவின் மோட்டார் வாகனத் தொழில் துறையில் மாபெரும் மாற்றம் ஏற்படுத்திய தொழிலதிபராக ரத்தன் டாடா திகழ்கிறார்.

இன்றைக்கு டாடா குழுமத்தின் ஆண்டு வருமானம் 100 பில்லியன் அமெரிக்க டொலர்கள். டாடா நிறுவனத்தின் 66% பங்குகள் தொண்டு நிறுவனங்களுக்கு சொந்தமானவை. இந்த வருமானத்தின் பெரும் பகுதியை நேரடியாக இந்த ட்ரஸ்டுகளின் வழியே கல்வி, மருத்துவம், சமூகம், கலை என இந்த சமூகத்திற்கே திருப்பியளிக்கும் ஒரு முன்மாதிரியான நடைமுறையை பின்பற்றுகிறார்கள்.

புதிய பரிசோதனைகளை செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர், இளைஞர்களை, கண்டுபிடிப்பாளர்களை, விஞ்ஞானிகளை, ஆய்வாளர்களை எப்பொழுதும் தன் உடன் வைத்திருந்தவர்.

> **கொரோனாத் தொற்று இந்திய நாட்டையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த போது அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலும், எல்லாத் தொழில்களும் மூடப்பட்டு இருந்த நேரத்திலும் ரத்தன் டாடா இந்தச் சூழலை உணர்ந்து ரூ.1500 கோடிகளை முதல் தவணையாக இந்திய அரசுக்கு வழங்கினார்.**

கொரோனாத் தொற்று இந்திய நாட்டையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த போது அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலும், எல்லாத் தொழில்களும் மூடப்பட்டு இருந்த நேரத்திலும் ரத்தன் டாடா இந்தச் சூழலை உணர்ந்து ரூ.1500 கோடிகளை முதல் தவணையாக இந்திய அரசுக்கு வழங்கினார்.

அதானி போலவோ அம்பானி போலவோ ஆர்ப்பாட்டம் செய்யாமல், அடக்கமாக இருப்பது எப்படி என்பதற்கு ரத்தன் டாடா முன்னோடி. அதனால் அவர் நல்லவராகத் தோற்றமளிக்கிறார். அவரிடமிருந்து அந்த அடக்கத்தைக் கற்றுக்கொள்ளவது அவசியமானதாகிறது.



SST
SPICES
& Things



Indian | Sri lankan | South Asian
Groceries & Take away

At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you’re picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we’ve got you covered!



7 days
10 am to 8 pm

SST Spices
& Things
Where quality meets community

Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020

Contact:
03 9417 2517

Email:
sstspicesnthings@gmail.com

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 86 ஐப்பசி 2024 தொ.பே:1800 960 162

## அது கொழுக்கட்டை இது மோதகம்

பொதுநலவாய நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை கடந்த 2022 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டு அதற்கு பதிலாக புதியதொரு அமைப்பு விரைவில் ஏற்படுத்தப்படும் என ஆஸ்திரேலிய மத்திய அரசின் சட்டமா அதிபர் அறிவிப்பொன்றை விடுத்திருந்தார்.இந்நிலையில் AAT கலைக்கப்பட்டு தற்போது Administrative Review Tribunal (ART) புதிய நிர்வாக அலகுடன் காலடி எடுத்து வைத்துள்ளது லேபர் அரசு.

ஒன்பது வருடங்களுக்கு பின்னர் ஆட்சிபீடமேறிய லேபர் கட்சி, முன்னைய லிபரல் அரசின் நெளிவுசுழிவு களைக் கண்டுபிடித்து சுளுக்கெடுத்து வந்த நிலையில், ஸ்கொட்மொறிசனின் தலைமையிலான அரசாங்கத்தின் காலத்திலேயே AATக்குள் அரசியல் தலையீடு அதிகமாகக் காணப்பட்டது என்று லேபர் கட்சி குற்றம் சுமத்தியிருந்தது.

ஸ்கொட்மொறிஸனின் ஆட்சியில் மூன்றில் ஒரு பங்கு அரசியல் தலையீட்டின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டன. AAயின் பிரதான பிரிவுகளின் முக்கியமான பதவிகளில் அரசியல் சார்ந்தவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. இது சட்ட ஆட்சியில் ஏற்பட்ட புற்றுநோயாகும் என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர். அப்போதைய லிபரல் அரசின் காலத்தில் துரித கதி விசாரணையின் மூலம் நிராகரிக்கப்பட்ட அகதிகள் தான் இப்போது போராடிக் கொண்டிருக்கின்றனர். அதேவேளை ஆட்சிக்கு வர முன்னர் லேபர் அரசு அளித்த வாக்குறுதிகளின் படி லிபரல் அரசின் துரிதகதி பரிசீலனை முறையை அதன் மறுபரிசீலனை முறைமையிலும் மாற்றத்தை கொண்டு வருவோம் என தெரிவித்திருந்தது.

இந்நிலையிலையே ART என்ற நாமத்துடன் சுமார் 250 பேரை உள்வாங்கி மீண்டும் களத்தில் இறங்கி யுள்ளது.

இந்த நடைமுறையிலும் ஒரு சிக்கலை செருகியுள்ளது லேபர் அரசு .அதாவது ஒரு வழக்கில் எடுக்கப்பட்ட முடிவில் தவறு என்னவென்பது குறித்து சுமார் 7 நாட்க ளுக்குள் ARTக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அதேவேளை விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தில் சின்னச் சின்ன தவறுகள் இடம்பெற்றாலும் விண்ணப்பத்தை பரிசீலிக்காமல் விடலாம். ஏழு நாட்களில் சட்டத்தரணியை அணுகுவது என்பது ஆஸ்திரேலியாவில் குதிரைக்கொம்பு. இந்த நிலையில் அவசரத்துக்கும் செல்லும் அகதிகளிடம் பணச் செலவுகளை அதிகரிக்கவே செய்யும். ஏழு நாட்களுக்குள் விண்ணப்பிக்கத் தவறின் நீதிமன்றம் செல்ல வேண்டும். இது அகதிகளை மென்மேலும் மனஉளைச்சலுக்கே உட்படுத்தும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

லேபரோ, லிபரலோ எந்தகட்சி ஆட்சியில் இருந்தாலும் தங்களது சுயநல அரசியலையே பிரதானமாகக் கருதுவர். மக்கள் நலன் என்பதெல்லாம் புறத்தோற்ற ஒப்பனைகள் தான். அகதிகள் தொடர்பான கொள்கையில் எவ்வாறு போட்டிபோட்டு சட்டங்களை நடைமுறைப்படுத்தினார்கள் என்பது இதற்கு மிகச் சிறந்த உதாரணம். லிபரல் ஆட்சியில் fast track process எப்படியோ அது போலவே தான் Administrative Review Tribunal. அது மோதகம் என்றால் இது கொழுக்கட்டை. வெளியமைப்பில் தான் வித்தியாசமே தவிர உள்ளூடல் எல்லாமே ஒன்றுதான்.

# மூன்று தசாப்தங்களைத் தாண்டும் தமிழ் ஊக்குவிப்பு போட்டி





புலம்பெயர்ந்து வாழும் தேசத்தில், தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் நேசிக்கின்ற, ஆளுமைமிகு இளைய தலைமுறையொன்றின் உருவாக்கத்தை நோக்காகக் கொண்டு நடத்தப்படுகின்ற “தமிழ் ஊக்குவிப்பு போட்டி“ , இவ்வருடம் மூன்று தசாப்தங்களைப் பெருமிதத்துடன் தாண்டுகிறது. ஆஸ்திரேலியக் கண்டமெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான இளையோரை இத்தனை வருடங்களாக “தமிழ்“ உணர்வால் இணைத்த இந்த மகத்தான பயணத்துக்கு வித்திட்டவர்களினதும், வளர்ச்சிக்கு கைகொடுத்தவர்களினதும் தூரநோக்கும் அர்ப்பணிப்பும் எம்சமூகத்தின் வரப்பிரசாதம் ஆகும். கடந்த முப்பது வருடப் பயணத்தில், சமூகத்தின் பின்னூட்டல்களை உள்வாங்கி, காலத்தின் தேவைக்கேற்ற வகையில் தன்னை மாற்றி, இளையவர்களின் “தமிழ்“ மீதான ஈடுபாட்டை வளர்த்திட காத்திரமான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இப்போட்டியில், வருடாவருடம் கிட்டத்தட்ட இரண்டாயிரம் இளையோர், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தின் பல மாநிலங்களிலிருந்து பங்கு பற்றிவருகிறார்கள்.

1994ம் ஆண்டு சிட்னியில் ஆரம்பமான போட்டிகள், 2006 ஆம் ஆண்டிலிருந்து ஏனைய மாநிலங்களிலும் நடைபெறத் தொடங்கின. இன்று பல வயதுப் பிரிவுகளில், நான்கு வயதிலிருந்து இருபத்தைந்து வயது வரையுள்ளவர்கள், கவிதை மனனம், ஆத்திசூடி, திருக்குறள், பேச்சு, தனிநடிப்பு, முன்னேற்பாடற்ற பேச்சு, எழுத்து , போட்டிகள் (விவாதம், வினாடிவிடை) போன்ற போட்டிகளில் பங்குபெற முடியும். போட்டிகள் மாநில மற்றும் தேசிய நிலைகளில் நடைபெறுகின்றன. மாநிலநிலையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள், தேசியப் போட்டிகளில் பங்கு பெறுகிறார்கள். தேசியநிலையில் நடத்தப்படுகின்ற பத்து போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் தேசியப் பரிசளிப்பு நிகழ்வில் வழங்கப்படுகின்றன. (07ஆம் பக்கம் பார்க்க)



## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# மூன்று தசாப்தங்களைத் தாண்டும் தமிழ் ஊக்குவிப்பு போட்டி

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலப் பரிசளிப்பு விழாக்களில், பங்குபற்றிய அனைத்துப் போட்டியாளர்களும் பரிசளிக்கப்பட்டு பாராட்டப்படுகின்றார்கள்.

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம் நடத்தும் தமிழ் ஊக்குவிப்புப் போட்டியில், இளைஞர் பிரிவிற்கான விசேட எழுத்தறிவுப்போட்டி, உயர்தர பரீட்சைப் பாடத் திட்டத்தைச்(HSC / VCE) சார்ந்ததாக "கேட்டுப் பதிலளித்தல்", "வாசித்துப் பதிலளித்தல்" மற்றும் "எழுத்தாக்கம்" என்று மூன்று பகுதிகளை உள்ளடக்கியதாக அமைகின்றது.

| தமிழ் ஊக்குவிப்பு போட்டி | | |
|---|---|---|
| இணையம்: www.tamilcompetition.org.au | மின்னஞ்சல்: national@tamilcompetition.org.au | |
| தேசிய ஒருங்கிணைப்பாளர் | திரு. கு.சிவசுதன் | 0403 474 145 |
| எழுத்துத் தேர்வு இணைப்பாளர் | திரு. ஶ்ரீ கௌரிதாசன் | 0408 647 056 |
| நியூ சவுத் வேல்ஸ் மாநில இணைப்பாளர் | திரு. பகீரதன் சிவபாலன் | 0401 354 030 |
| விக்டோரியா மாநில இணைப்பாளர் | திரு. சஞ்சயன் ஶ்ரீஸ்கந்தராஜா | 0450 351 060 |
| குயின்ஸ்லாந்து மாநில இணைப்பாளர் | திரு. த.யோகேஸ்வரன் | 0422 457 593 |
| தெற்கு ஆஸ்திரேலியா மாநில இணைப்பாளர் | திரு. ராஜ் ஶ்ரீதர் | 0406 628 634 |
| ஆஸ்திரேலிய தலைநகர் பிரதேசம் மாநில இணைப்பாளர் | திரு மயூரன் சிவராசா | 0403 089 766 |
| மேற்கு ஆஸ்திரேலியா மாநில இணைப்பாளர் | திரு நந்தகோபன் ராஜேஸ்காந்தன் | 0499 080 074 |
| வெலிங்டன் நியூசிலாந்து மாநில இணைப்பாளர் | திரு. எஸ்.தயாபரன் | +64 22 427 9382 |

**தமிழ்ப் பணியில் முப்பது வருடங்கள்!**

**வருடந்தோறும் 2000 இளையோர்களை ஆஸ்திரேலிய கண்டமெங்கும் இணைக்கும் தளம்!**

**வயதிலிருந்து 25 வயதுள்ள இளையோருக்காய் பல வயதுப் பிரிவுகளில் பல போட்டிகள்**

**அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில், மாநில மற்றும் தேசிய நிலைப் போட்டிகள்**

**மாநில நிலையில் போட்டியில் பங்குபற்றும் அனைவருக்கும் பரிசில்கள்!**

**தேசியப் போட்டிகளில் 10 தங்கம் , 10 வெள்ளி மற்றும் 10 வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.**


**2017ம் ஆண்டிலிருந்து, தமிழ் மொழிப் பரீட்சசைக்கான மாதிரிப் பரீட்சையும் - மாநிலமெங்கும் அப்பரீட்சையில் பங்குபற்றியவர்களுக்கான நேர்முக பின்னூட்டல் அமர்வுகள்**









உயர்தரப் பரீட்சையில், தமிழை ஒரு பாடமாக எடுப்பவர்களுக்கு இது ஒரு மாதிரிப் பரீட்சையாக அமைகின்றது. மேலும் இப்பரீட்சைக்கான நேர்முக பின்னூட்டல் அமர்வுகள், பங்குபெறும் எல்லா மாநிலங்களிலும் நடாத்தப்படுகின்றன.

2024ம் ஆண்டுப் போட்டிகள் எல்லா மாநிலங்களிலும் நடந்தேறிவிட்டன. தேசியப் போட்டிகளும், தேசியப் பரிசளிப்பு விழாவும் செப்ரெம்பர் 28 மற்றும் 29ம் திகதிகளில் சிட்னியில் நடைபெற்றன. கிட்டத்தட்ட 125 போட்டியாளர்கள் தேசியப் போட்டியில் பல மாநிலங்களிலிருந்தும் பங்குபற்றினார்கள். மேலும் மாநிலப் போட்டிகளில் கிட்டத்தட்ட 1,700 மாணவர்கள் பங்குபற்றினார்கள்.

"தமிழ்" மீது இளையதலைமுறையினருக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் மென் திறமைகளை வளர்க்கின்ற - சமூகப் பிணைப்பை ஏற்படுத்துகின்ற ஒரு தளமாகவும் இப்போட்டி அமைகின்றது. இந்த காத்திரமான, பயனுள்ள பயணத்துக்கு கைகொடுத்த பரீட்சை சபை உறுப்பினர்களாகவும் நடுவர்களாகவும் அரும்பணியாற்றிய தமிழ் ஆர்வலர்கள், ஆர்வத்துடன் பங்கெடுத்த இளையோர், வழிகாட்டிய பெற்றோர்கள், பல வழிகளிலும் உதவிய தமிழ்ப் பாடசாலை நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள், போட்டி குறித்த தகவல்களை சமூகத்திடம் சேர்ப்பித்த ஊடக நிறுவனங்கள் மற்றும் அயராது உழைத்த தொண்டர்கள் அனைவரும் இத்தருணத்தில் மிக்க நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

காலத்தின் தேவையாய் - பாடசாலைகள், மாநிலங்கள் கடந்து தமிழ் இளையோர்களை இணைக்கும் பாலமாக - ஆஸ்திரேலிய கண்டமெங்கும் தமிழ் ஊட்டலை ஊக்குவிக்கும் இந்த செயற்திட்டத்துக்கு சமூகமாய் மேலும் வலுச்சேர்த்து, வரும் தலைமுறையெல்லாம் பயனுற வழிசமைப்போம்.



# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# அனுர அலை; இலங்கையை என்ன செய்யும்?



● கருணாகரன்

அனுரகுமாரவின் வெற்றி, புதிய அலையொன்றை அல்லது புதிய சூழலொன்றை உருவாக்கியுள்ளது. அது சிங்களம், முஸ்லிம், தமிழ், மலையகம் என எந்த வேறுபாடுகளும் இல்லாமல் நாடுமுழுவதிலும் உருவாகியிருக்கும் புதிய அலையாகும். இதனால் சிங்களத் தேசியம், தமிழ்த்தேசியம், முஸ்லிம்தேசியம், மலையகத் தேசியம் என்பவற்றைக் கடந்து பெருவாரியான மக்கள் NPP எனப்படும் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரளும் நிலை உருவாகியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலின்போது "நாடு அனுரவோடு" என்ற வாக்கியத்தைக் கொண்ட சுவரொட்டிகள் நாடெங்கும் காணப்பட்டன. அது உண்மையோ என்று யோசிக்கக் கூடிய அளவுக்கு தற்போதைய சூழல் உள்ளது. வரலாறு சிலவேளை இப்படியான வரலாற்றுப் பாத்திரங்களின் வழியாக அதிசயங்களை நிகழ்த்துவதுண்டு. "அனுர" என்ற இந்த வரலாற்றுப் பாத்திரம், அப்படியான அதிசயத்தை உருவாக்குகிறது போலும். அனுரவின் மூலம் தேசிய மக்கள் சக்தி (NPP) க்கு இதுவரையில்லாத அளவுக்குப் பேராதரவு பெருகுகிறது. இன்னொரு நிலையில் இது தமிழ், முஸ்லிம், மலையக, சிங்களத் தேசியங்கள் என்ற அடையாளக் கோடுகளைத் தகர்த்து, ஐக்கிய இலங்கை என்ற பொதுப் பரப்பிற்குள் சொல்லாமற் கொள்ளாமல் எல்லோரையும் இழுத்து விடப்பார்க்கிறது.

இதனால் தற்போது உருவாகியிருக்கும் NPP க்கு ஆதரவான அலையைக் குறித்தோ அல்லது NPP ஐப் பற்றியோ யாரும் விமர்சிக்கவும் முடியாது. மதம், அரசியல், கலை போன்றவற்றில் மக்களுக்கு ஈர்ப்பு ஏற்பட்டு, அது தீவிரப் பற்றாக வளர்ச்சியடைந்து பேரபிமானமாக மாறிவிடுவதுண்டு. இந்த ஈர்ப்பு அமைப்புகள், கட்சிகளிடம் மட்டுமல்ல, தனி நபர்களில் மீதும் உருவாகும். அப்படி உருவாகி விட்டால் அதற்குப் பிறகு அந்த அமைப்பையோ, அந்தத் தலைவரையோ யாரும் கேள்வி கேட்கவும் முடியாது, விமர்சிக்கவும் முடியாது. இப்படியான ஒரு நிலை இப்போது உருவாகியுள்ளது. அந்தளவுக்கு NPP மீதான பேரபிமானம் சகல தரப்பு மக்களிடமும் மேலோங்கியுள்ளது.

இந்த அபிமானம் நாட்டிற்குள் மட்டுமல்ல, நாட்டுக்கு வெளியே புலம்பெயர்ந்து வாழ்கின்ற இலங்கையர்களிடத்திலும் பரவியுள்ளது. இதனால் நாடாளுமன்றத் தேர்தலில் NPP ஐ வெற்றியடைய வைப்பதற்குக் களப்பணியாற்றுவதற்கென்று அவர்கள் இலங்கைக்குப் பயணித்துக் கொண்டுள்ளனர்.

இதற்குக் காரணம், இலங்கையில் மாற்றம் நிகழ்த்தப்பட வேண்டும். புதிய அரசியற் பண்பாடொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற விருப்பமேயாகும். இந்த விருப்பம் நீண்ட காலமாகப் பலருடைய மனதிலும் நிறைவேறாமலிருந்த மாபெரும் கனவாகும். அந்தக் கனவை நனவாக்குவதற்கான வரலாற்றுத் தருணம் இதுவெனப் பலரும் கருதுகின்றனர். ஆகவேதான் அதற்கான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்று செயலாற்ற விளைகின்றனர்.

இந்த நிலையை உருவாக்கியது கடந்த காலத்தில் ஆட்சியதிகாரத்திலிருந்த தரப்புகளேயாகும். அவற்றின் கூட்டுத் தவறுகளே அரகலய எழுச்சி. அதுவே NPP க்கான மாபெரும் ஆதரவு அலையை உருவாக்கியுள்ளது. இப்போது NPP எதிர்பார்த்திராத அளவுக்கு இந்த அலை உச்சமடைகிறது. ச் சும்மா இருக்கவே வேலை நடக்கிறது என்று சொல்வார்களல்லவா, அப்படிச் சொல்லுமளவுக்கு நிலைமை - சூழல் - NPP க்குச் சாதகமாக உருவாகியுள்ளது.

பேராளுமைகள் அல்லது வரலாற்றுச் சூழலைக் கையாளத் தெரிந்த ஆற்றலர்கள் எழுச்சியடையும்போது இவ்வாறான "மாற்றச் சூழல்" (Condition of Change)அமைவதுண்டு. இது எப்படி அமையும் என்பது NPP யின் அடுத்த கட்ட நகர்வைப் பொறுத்தே தெரியும். தனக்குக் கிடைத்த வரலாற்றுத் தருணத்தை அனுரவும் NPP யும் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளப்போகின்றனர்? எவ்வாறு மதிப்பைக் கூட்டப்போகின்றனர்? என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். இதற்கு அது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற வேண்டும். இதற்கு அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் NPP பெரும்பான்மையைப் பெற வேண்டும்.

இப்போது அனுர தலைமையிலான மூவர் கொண்ட அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவையில் அதிரடியாகச் சில வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றக் கலைப்பு, அமைச்சரவை நியமனம், அமைச்சுச் செயலாளர்கள் நியமனம், இழுபறியிலிருந்து பதில் பொலிஸ்மா அதிபர் நியமனம், சுற்றுலாப்பயணிகளுக்கு விசா பெறுவதில் இருந்த நெருக்கடிகளை மாற்றியமைத்தமை, அநாவசியச் செலவுகளைக் குறைக்கும் வகையிலான நடவடிக்கைகள், மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் எரிபொருள் விலைக் குறைப்பு, உர மானியம் போன்றவற்றை வழங்குவதற்கான ஏற்பாடு போன்றவற்றைப் புதிய அமைச்சரவை செய்துள்ளது. இது NPPக்கு மேலும் ஒரு சிறிய கவர்ச்சியையும் நம்பிக்கையையும் உண்டாக்கியிருக்கிறது.

இப்பொழுது எல்லோருடைய வாயிலும் உச்சரிக்கப்படும் பெயராக அனுரகுமார திசநாயக்க மாறியிருக்கிறார். "AKD" என்று அனுரவைச் செல்லமாக - உரிமையோடு அழைக்கிறார்கள். தங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரைப்போல அல்லது நெருங்கிய நண்பரைப்போல அனுரவைப் பற்றி நெருக்கமாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரும் அவருடைய Profile ஐ தேடி அறிந்து கொண்டிருக்கிறார்கள். அனுரவின் வீடிருக்கும் "தம்புதேகம" என்ற சிறிய - ஆழக் கிராமத்தை நோக்கி YouTuper's குவிகின்றனர். சமூக வலைத்தளங்களில் அனுரவின் படங்களும் நிகழ் காட்சிகளும் செய்திகளுமே நிறைந்து கிடக்கின்றன. தேர்தலில் பெற்ற வெற்றியின் மூலம் ஜனாதிபதியாகியது மட்டுமல்ல, ஒரே நாளில் பெரியதொரு கதாநாயகனாகவே அனுரகுமார திசநாயக்கவின் பிம்பம் மேலெழுந்துள்ளது.

இலங்கையின் அண்மைய வரலாற்றில் மிக உச்சமான செல்வாக்கைப் பெற்ற தலைவராகியிருக்கிறார் அனுர. இப்படி அனுர புகழடைந்த அளவுக்கு அவருடைய தேசிய மக்கள் சக்தி அறிமுகமாகிருக்கிறதா? புகழடைந்திருக்கிறதா என்றால், இன்னுமில்லையென்றே சொல்ல வேண்டும். இன்னும் அதற்கு நாடு முழுவதிலும் கட்டமைக்கப்பட்ட செல்வாக்கு மண்டலம் உருவாகவில்லை. ஆக இதொரு திடீர் வீக்கமாகவே உள்ளது. என்னதான் ஆதரவு அலை NPP க்கு உருவாகியிருந்தாலும் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு அது பொருத்தமான ஆட்களை இன்னும் தேடிக்கொண்டேயிருக்க வேண்டிய நிலை. தெற்கில் ஓரளவுக்குச் சமாளிக்கக் கூடியதாக இருந்தாலும் வடக்கு- கிழக்கில் தகுதியான ஆட்களைத் தேடுவதில் பிரச்சினை உண்டு. ஆனால் NPPயில் போட்டியிடுவதற்குப் பலரும் ஆர்வமாக உள்ளனர். அவர்களை வடிகட்டி எடுக்க வேண்டும்.

அனுரவின் மூலம், அவருடைய வெற்றியின் வழியே இப்பொழுது தேசிய மக்கள் சக்தி (NPP) பரவலாக அறியப்பட்டு வருகிறது. அதாவது ஏற்கனவே அது பெற்றிருந்த அறிமுகப் பரப்பை விட இப்போழுது அதனுடைய பரப்பெல்லை விரிவடைந்துள்ளது. பலரும் தங்களுடைய அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதற்கு முற்படுகின்றனர். இதனால் அடுத்து வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களைப் பெறக் கூடிய வாய்ப்புகள் உண்டு. அது எந்தளவுக்கு என்பதை இப்பொழுது சரியாக மதிப்பிட முடியாது விட்டாலும் ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளை விட கூடுதலான வாக்குகளை தேசிய மக்கள் சக்தி பெறும் என்பது உறுதி. அதில் வடக்கு-கிழக்கு வாக்குகளும் சேரக் கூடிய சூழலுண்டு.

ஆகவே NPP ஆட்சியை வலுப்படுத்தக் கூடிய நிலையை நோக்கி நகர்கிறது எனலாம். அப்படி அமைந்தால் அது எப்படியான நிலையை இலங்கையில் உருவாக்கும் என்ற கேள்வி முக்கியமானது. "வலுவான ஆதரவுத் தளம் இருந்தால் தான் NPP குறிப்பிட்டதைப்போல அல்லது திட்டமிட்டிருப்பதைப்போல அவர்களுடைய முழுமையான ஆட்சியை வழங்க முடியும். இலங்கையில் சிறிய அளவிலான மாற்றத்தையேனும் உருவாக்க முடியும். மாற்று அரசியல் பண்பாடொன்று எழுச்சியடையும். ஊழல்வாதிகளின்மீது துணிந்து நடவடிக்கை எடுக்கலாம். அப்படி அமையவில்லை என்றால், பலவீனமான அரசாங்கத்தினால் எதையும் செய்ய முடியாது போய்விடும். இழுபறிகளே தொடரும். அது இலங்கைக்கு நல்லதல்ல. பதிலாகப் பிராந்திய சக்திகளுக்கும் வல்லரசுகளுக்குமே (பிற சக்திகளுக்கு) மிக வாய்ப்பாகி விடும். இதை நோக்கியே இந்தியாவும் அமெரிக்காவும் காய்களை நகர்த்துகின்றன" என்பது ஒரு சாராருடைய கருத்து. இதில் உண்மையுண்டு.

இதற்கு மாற்றுப் பார்வையுமுண்டு. NPP க்குப் பேராதரவு கிடைக்குமாக இருந்தால் அது இரண்டு விதமாக நிலைமையை உருவாக்கும். ஒன்று, 1977 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்குக் கிடைத்த பலத்தைப்போன்ற ஒரு சூழலை ஏற்படுத்தும். அதற்குப் பிறகு கேள்விக்கிடமில்லாத வகையில் அனைத்துத் தீர்மானங்களையும் அனைத்துத்திட்டங்களையும் தேசிய மக்கள் சக்தியே தனித்து முன்னெடுக்கும். அதை விமர்சிக்கவோ தவறெனில் தடுத்து நிறுத்தவோ பிற சக்திகளால் இயலாமற் போய் விடும். ஜனநாயகச் சூழல் கெட்டுவிடும். NPP யின் வரலாறு என்பது ஜே.வி.பியினுடைய வரலாறாகும். ஜே.வி.பி என்பது ஆயுதம் தாங்கியதோர் அமைப்பு. ஆயுதம் தாங்கிய அமைப்பில் என்னதான் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசினாலும் அதற்கப்பால் அதற்குள் ஒரு மூடுண்ட நிலை எப்போதுமிருக்கும். ஜே.வி.வி ஆயுத அரசியலை விட்டுப் பல ஆண்டுகளாகினாலும் அதனிடத்தில் இன்னும் அந்தக் கூறுகள் உண்டு. அதாவது ஆயுதமேந்திய இயக்கம் என்ற உள்ளுணர்வு. தாம் திட்டமிடுவதும் தீர்மானிப்பதுமே சரி. மற்றதெல்லாம் தவறு என்ற உணர்வு அவர்களிடம் எப்போதுமுண்டு. இதனால்தான் அது எவரோடும் கூட்டு வைத்துக் கொள்ளாமல் தனித்தே நிற்கிறது. தன்னைத் தூய்மையானதாகக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறது. இது ஜனநாயக அரசியலை முன்னெடுக்கும் தரப்பினருக்கு (கட்சியினருக்கு) பொருத்தமானதல்ல. ஆனாலும் இதைப் புரிந்து கொண்டு தம்மை விரித்துக் கொள்வதற்கு தேசிய மக்கள் சக்தியினால் முடியாதிருக்கிறது. இந்த நிலையைக் கடக்க வேண்டிய யதார்த்தத்தை NPP எதிர்கொள்ள வேண்டும். ஆட்சிக்கு வெளியே நின்று பேசுவது இலகு. ஆட்சியில் செயற்படுவது கடினம். இந்த உண்மையை NPP இப்பொழுது உணர்ந்து கொண்டிருக்கிறது.

இதேவேளை இப்பொழுது நாட்டில் இரண்டு வகையான அரசியல் போக்கு உருவாகியுள்ளது. NPP யின் எழுச்சி அல்லது அலை இதை உண்டாக்கியுள்ளது. இந்தப் போக்கே இனிச் சில காலத்துக்குத் தொடரும். அடுத்த தேர்தலிலும் இந்த அடிப்படையிலான தேர்வே உண்டு. எப்படியென்றால் -

ஊழல்வாதிகள் - நேர்மையானோர்
சரியானவர்கள் - தப்பானவர்கள்
நல்லவர்கள் - கெட்டவர்கள்
கறுப்பு - வெள்ளை

தனித்துத் தனித்துவமாக நிற்போர் - கூட்டு வைத்திருப்போர் கூட்டணிகள் என. இந்த எதிரொலிப்பு நாடு முழுவதிலும் பரவியுள்ளது. தமிழ்ப்பரப்பிலும் NPP யின் தாக்கத்தை உணர முடிகிறது. தமிழ்த்தேசியக் கட்சிகளே இதைக் கண்டு அஞ்சுகின்றன. நிச்சயமாக அடுத்த பொதுத் தேர்தலில் இதனுடைய பிரதிபலிப்பைக் காணலாம்.

அடுத்த வரப்போகிற தேர்தல்களில் எப்படியான தெரிவை மக்கள் செய்யப்போகிறார்கள்? என்பதே இலங்கையின் - NPP யின் - அனுரவின் வெற்றி - தோல்வியைத் தீர்மானிக்கும். ■


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இஸ்ரேல்-ஈரான் இடையே பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், மத்திய கிழக்குப் பகுதி எப்போதும் போல கொந்தளிப்பாகவே உள்ளது. பலரும் நினைப்பது போல இரு நாடுகளும் வரலாற்று எதிரிகள் அல்ல. பல காலம் நட்புடனும் இருந்த நாடுகளே.

மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு பெரும் மோதல் பற்றிய அச்சம் எழுந்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் மற்றும் ஈரான், இரண்டு நாடுகளில், எந்த நாட்டின் இராணுவம் பலம் மிக்கது என்ற கேள்வியும் எழுகிறது.

இரு நாட்டு ராணுவத்தின் தாக்கும் திறனை ஒப்பிட்டு, பல்வேறு அதிகாரபூர்வ மற்றும் இணையத்தில் கிடைக்கும் முறைகளைப் பயன்படுத்தி இராணுவ வலிமை மதிப்பிடப்படுகிறது.

**அன்று நண்பன் இன்று பகைவன்:**

இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல், போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது என்றாலும், இந்த இரண்டு நாடுகளும் நிரந்தர எதிரிகளாக இருந்ததில்லை.

இன்னும் சொல்லப்போனால், பொது எதிரிக்காக இருவரும் கைகோர்த்த பல சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.



# இஸ்ரேல் - ஈரான் படையியல் ஒப்பீடு: அன்று நண்பன் - இன்று பகைவன் ஏன்?

1960களில், இஸ்ரேலும், ஈரானும் ஈராக்கிற்கு எதிராக இணைந்து செயல்பட்டன.

விரோதப் போக்கு கொண்ட அரபு ஆட்சிகளுக்கு எதிராக இஸ்ரேல் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கையில், ஈரான் அதன் கடைசி மன்னரான ஷா என அழைக்கப்படும் முகமது ரெசா பஹ்லவியின் ஆட்சியில் இருந்தது. ஈராக் பொது எதிரியாகக் கொண்டு, இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் மற்றும் ஈரானின் உளவு அமைப்பான சாவக் ஆகியவை மத்திய ஈராக்கிய ஆட்சிக்கு எதிராக குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு ஊக்கமளிப்பதில் முக்கியமான பங்காற்றின.

மேலும், இஸ்ரேல், ஈரான், துருக்கி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய முத்தரப்பு உளவுக் கூட்டணியையும் உருவாக்கின. ஷாவின் ஆட்சியின் இறுதிக்காலம் வரை இந்த உறவு அழுத்தமாக நீடித்தது.

**இஸ்ரேல் -ஈரான் ஓர் ஒப்பீடு:**

ஈரான் இஸ்ரேலை விடப் பலமடங்கு பெரிய நாடு. அதன் மக்கள் தொகை கிட்டத்தட்ட ஒன்பது கோடி. இது இஸ்ரேலின் மக்கள்தொகையான ஒரு கோடியைவிட பல மடங்கு அதிகமாகும்.

கடந்த 2023 ஆண்டில் ஈரானின் பாதுகாப்பு பட்ஜெட் சுமார் 740 கோடி அமெரிக்க டொலராக இருந்தது. ஆனால் இஸ்ரேலின் பாதுகாப்பு பட்ஜெட் அதைவிட இருமடங்காக இருந்தது. அதாவது 1,900 கோடி அமெரிக்க டொலராக இருந்தது.

இஸ்ரேலின் பாதுகாப்புச் செலவு, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது ஈரானைவிட இரட்டிப்பாகும்.

சமீபத்திய புள்ளி விவரங்களின்படி இஸ்ரேல் - ஈரான் இராணுவ பலம் ஒப்பீடுகளின்படி ஈரான், இஸ்ரேலைவிட ஆறு மடங்கு அதிகமான இராணுவ வீரர்களைக் கொண்டுள்ளது. ஈரானிடம் 6 லட்சம் ராணுவ வீரர்கள் உள்ளனர். இஸ்ரேலிடம் 1 லட்சம் வீரர்களே உள்ளனர்.

அத்துடன் இஸ்ரேலிடம் 3,501 டாங்கிகள், 64 கடற்படைப் போர்க் கப்பல்கள், 3,106 ஏவுகணைகள், 460 போர் விமானங்கள்-ஹெலிகொப்டர்கள் ,ன் 48 நில வான் ஏவுகணைகள் என்பன




| | | |
|---|---|---|
| மக்கள் தொகை | 96 லட்சம் | 8.86 கோடி |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (அமெரிக்க டாலர்களில்) | 525 பில்லியன் | 413 பில்லியன் |
| தனிநபர் ஜிடிபி (அமெரிக்க டாலர்களில்) | 54,931 | 4,669 |
| பாதுக்காப்பு துறை பட்ஜெட் (அமெரிக்க டாலர்களில்) | 19 பில்லியன் | 7.4 பில்லியன் |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதுகாப்பு துறையின் விகிதம் | 4% | 2% |

*2022க்கான தரவுகள். சில விவரங்கள் பொதுவெளியில் கிடைக்கும் தரவுகளில் இருந்து மதிப்பிடப்பட்டுள்ளன.

உள்ளன,

ஆயினும் 1 [S1], 613 டாங்கிகள், 261 கடற்படைப் போர்க் கப்பல்கள், 1,491 ஏவுகணைகளை மட்டுமே ஈரான் கொண்டுள்ளது. அத்துடன் ஈரான் 336 போர் விமானங்கள்-ஹெலிகொப்டர்களையும், 279 நில வான் ஏவுகணைகளையும் வைத்துள்ளது.

**அணு ஆயுத பலம்:**

இஸ்ரேல் அதன் சொந்த அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இதுபற்றி அந்நாடு தெளிவாக ஒருபோதும் கூறுவதில்லை.

ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக குற்றச்சாட்டுகள் இருந்தாலும், அந்நாடு அணு ஆயுதங்களை உருவாக்குவதற்குத் தனது அணுசக்தித் திட்டத்தைப் பயன்படுத்த முயல்வதாக வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை எப்போதும் மறுத்தே வருகின்றது.

**அமெரிக்காவின் நிலைப்பாடு :**

எப்போதும் இஸ்ரேல் சார்பான அமெரிக்காவின் நிலைப்பாடு ஒருபோதும் மாறுவதில்லை.

ஹிஸ்புல்லாவின் தலைவர் நஸ்ரல்லா கொல்லப்பட்ட பிறகு அறிக்கை வெளியிட்ட இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய மக்களையும், வெளிநாட்டவரையும் கொன்று குவித்ததற்கு காரணமானவரை கொன்று கணக்கை தீர்த்து விட்டோம் என்றார். இதற்கு அமெரிக்காவும் வக்காலத்து வாங்கியது.

லெபனானில் 1983இல் ஹிஸ்புல்லா இயக்கத்தினரின் வெடிகுண்டுத் தாக்குதலில் 63 பொதுமக்கள், அமெரிக்கக் கடற்படையினர் 241 பேர், பிரெஞ்சுப் படையினர் 58 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் ஈரானை எதிர்க்க, இஸ்ரேலுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்க உறுதியாக வழங்கிவருகிறது.

**லெபனானில் ஷியா, சுனி முஸ்லிம் வேறுபாடு:**

லெபனான் பொதுவாக ஷியா முஸ்லிம் நாடாக அறியப்பட்டாலும், அங்கு ஷியா, சுனி முஸ்லிம்கள் ஏறக்குறைய சம அளவில்தான் உள்ளனர்.

அதிகாரபூர்வ கணக்கெடுப்பு அங்கு நடைபெறாவிட்டாலும், கடந்த 2022ஆம் ஆண்டு வெளியிட்ட புள்ளி விவரத்தின் படி சுனி முஸ்லிம்கள் 31.2 சதவீதம், ஷியா முஸ்லிம்கள் 32 சதவீதம் உள்ளனர் என தெரிய வருகிறது.

இது தவிர கிறிஸ்தவர்கள் 32.4 சதவீதம் உள்ளனர். இந்துக்கள், பௌத்தர்கள், யூதர்கள், சிறுபான்மையினராவர்.

**சுனி, ஷியா முஸ்லிம் நாடுகளின் நிலைப்பாடு:**

நஸ்ரல்லா கொலையான பிறகு, சுனி முஸ்லிம்கள் தலைமையிலான பெரும்பாலான அரபு நாடுகள் அமைதி காத்தன. இஸ்ரேலுடனான உறவை சீர்படுத்துவதா அல்லது ஹிஸ்புல்லாவை ஆதரிக்கும் ஈரானை எதிர்ப்பதா என்ற குழப்பம்தான் இதற்கு காரணம்.

ஹிஸ்புல்லாவை 32 ஆண்டாக வழி நடத்திய நஸ்ரல்லாவின் எதிரி நாடுகள் பட்டியலில் இஸ்ரேல் மற்றும் மேற்கத்திய நாடுகள் பல இருந்தன. இதனால்தான் மேற்கத்திய நாடுகள், வளைகுடா அரபு நாடுகள், அரபு லீக் ஆகியவை ஹிஸ்புல்லாவை பயங்கரவாத அமைப்பு என அறிவித்திருந்தன.

சுனி முஸ்லிம் நாடான சவுதி அரேபியா, லெபனானில் நடக்கும் சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித்தாலும், நஸ்ரல்லா பற்றி எதுவுமே கூறவில்லை. இதேபோல்தான் சுனி முஸ்லிம் நாடுகளான கத்தார், பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளும் நஸ்ரல்லா கொலையுண்டமை குறித்து எதுவும் கூறவில்லை. ஏன் சில இடங்களில் நஸ்ரல்லா கொல்லப்பட்டமையைக் கொண்டாடியதாகவும் அறியப்படுகிறது.

2011ஆம் ஆண்டில் ஷியா முஸ்லிம் இயக்கத்தை பஹ்ரைன் ஒடுக்கியது. இதற்கு காரணம், பஹ்ரைன் ஷியா முஸ்லிம் நாடாக இருந்தாலும், ஆட்சியாளர்கள் சுனி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதால் தான். ஆனால், சிரியாவில் மக்கள் சுனி முஸ்லிம்களாகவும், ஆட்சியாளர்கள் ஷியாக்களாகவும் உள்ளனர்.

**லெபனானில் இஸ்ரேலியப் படையெடுப்பு:**

1982 இல் லெபனான் மீதான இஸ்ரேலின் முதல் படையெடுப்பு நிகழ்ந்தது. இதைத் தொடர்ந்து 2006ல் நடந்த லெபனான் போரில் ஹிஸ்புல்லாக்கள் எல்லை தாண்டி ஊடுருவி கொரில்லா தாக்குதலை நடத்தி 2 இஸ்ரேலிய வீரர்களைப் பிணைக்கைதிகளாகப் பிடித்தனர் மேலும் 3 வீரர்களைக் கொன்றனர். 34 நாள் போரில் 121 ஹிஸ்புல்லாக்கள் இறந்தனர்.

தரைப்படையெடுப்பில் பல சவால்கள் இருந்தாலும், இதனைக் போக்கும் வகையில் ஹிஸ்புல்லாவின் பதுங்கு குழிகள் அழிப்பு, நஸ்ரல்லா உள்ளிட்ட அந்த அமைப்பின் முக்கியமான தளபதிகள் கொலை, ஆயுதக் கிடங்குகள் அழிப்பு என அடுத்தடுத்த அதிரடித் தாக்குதல்களை நடத்திக்காட்டியுள்ளது இஸ்ரேல்.

முந்தைய படையெடுப்புகளில் நிகழ்ந்த கடும் அழிவின் பாடத்தில் இருந்து இந்த உத்திகளை இஸ்ரேல் தற்போது கையாள்வதாகக் கூறப்படுகிறது.



# ஏதிலிகளுக்காக என் குரல் ஓயாமல் ஒலிக்கும்

## அரண் மயில்வாகனத்துடன் ஒரு சந்திப்பு

**ஆஸ்திரேலியாவின் பல பிரதான நகரங்களில் உள்துறை அமைச்சரின் அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் அகதிகள் பல மாதங்களாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அந்தப் போராட்டங்களுக்கு காரணமாக அமைந்த மெல்பேர்ண் போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளரும் சோசலிச கட்சியின் முன்னாள் செனட்டர் வேட்பாளருமான அரண் மயில்வாகனத்துடன் எதிரொலி நடத்திய நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**

**நேர்கண்டவர்: ஜே,ஜே.**

**கேள்வி: அரண் மயில்வாகனம் யார்...?**

**பதில்:** இலங்கையில் நாகர் கோவிலில் பாடசாலை மாணவர்கள் மீது இலங்கை விமானப் படையின் தாக்குதலில் என் சகோதரன், என் நண்பர்கள் உட்பட 24 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தின் கண்கண்ட சாட்சியாளன். அன்று முதல் ஒடுக்கப்பட்வர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனை என் ஆழ் மனதில் குடி கொண்டது. அந்தச் சம்பவத்தின் பின்னர் நகர்கோவில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து 13 வயதில் பெற்றோரை விட்டு பிரிந்து ஆஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தவன். அதுமட்டுமின்றி புலம்பெயர்ந்த காலத்தில் ஆஸ்திரேலியாவின் தடுப்புக் காவலில் நான்கு வருடங்கள் இருந்தேன். அப்போதே - 2007 ஆம் ஆண்டிலேயே- ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கு எதிராக போராட்டக் களத்தில் இறங்கியவன். அன்று முதல் நான் ஒரு சமூகச் செயற்பாட்டாளனாக இருக்கிறேன். 2007 ஆம் ஆண்டு காலத்தில் நான் லேபர் கட்சியின் உறுப்பினர். ஆனால் 2007 -2009 ஆம் ஆண்டு காலத்தில் லேபர் அரசு இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு வழங்கிய உதவிகளே என்னுடைய இப்போதைய போராட்டங்களுக்கான காரணம்.

**கேள்வி: 24 மணி நேர போராட்டம் 100 நாட்களை தொட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தின் ஊடாக ஏதிலிகளுக்கு எவ்வாறு நிரந்தர விசாவை பெற்றுக் கொடுக்கப்போறீர்கள்..?**

**பதில்:** இந்தப் போராட்டத்தை ஒரு முன்னோடியாகவே பார்க்கவேண்டும். மெல்பேர்ணில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமே, ஆஸ்திரேலியாவின் பல மாநிலங்களிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட காரணமாக இருக்கிறது. இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது அரசுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையிலான பாலமாக பல அமைப்புகள் பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறன. Refugee Advocacy Network, asylum seekers resource centre Refugee action collective, refugee action collection போன்ற பல அமைப்புக்கள் அரசாங்கத்துடன் எமது போராட்டம் குறித்து பேசி வருகின்றன.

நீங்கள் நேர்காணல் செய்யும் போது கூட மெல்போர்ண் மற்றும் சிட்னியில் போராட்டங்களில் ஈடுபடும் அகதிகளை இணைத்து எமது தரப்பாக asylum seekers resource centre 1 விரைவில் நாடாளுமன்றம் சென்று பல உறுப்பினர்களையும் சந்தித்த பேச்சு நடத்தவுள்ளது. அப்படி பல வழிகளில் பேச்சு நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்தப் போராட்டம் ஆரம்பிக்கும் போது எமது ஆதரவாளர்களுக்கு கூட fast track proses குறித்து தெளிவு படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. தற்போது 90 நாட்களை போராட்டம் எட்டியிருக்கிறது. இந்த வேளையில் பல அமைப்புகள் எமக்காக குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். திரைமறைவில் பல லேபர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே குரல் கொடுத்து வருகின்றனர். இதுவே ஒரு வெற்றிதான். இந்தப் போராட்டம் தீர்வைத் தருமா இல்லையா என்பது நாங்கள் கொடுக்கும் அழுத்தத்தைப் பொறுத்தே உள்ளது. 86 நாட்களுக்கு முன்னர் அகதிகள் என்ன கட்டத்தில் இருந்தார்களோ அதை விட முன்னேற்றமான பாதைக்குள் வந்து விட்டனர்.

**கேள்வி: போராட்டகளத்தில் உள்ள பதாகைகளில் 9 ஆயிரத்து 500, 10 ஆயிரம், 12 ஆயிரத்து 500 அகதிகளுக்கு நிரந்தர விசா வழங்குமாறு வலியுறுத்து கிறீர்கள். அகதிகளின் எண்ணிக்கையில் ஏன் இப்படி மாறுபாடு? உண்மையில் எத்தனை அகதிகள் இந்த சிக்கலில் மாட்டுப்பட்டுள்ளனர்? இதில் எந்த தொகை சரியானது..?**

**பதில்:** இந்த அகதிகள் தொகை எவ்வாறு கணக்கிடப்பட்டது என்றால், இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் 31ஆயிரம் பேர் நிரந்த விசா இல்லாமல் இந்த சமூகத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்ற புள்ளி விவரம் இருந்தது. அந்தக் காலப்பகுதியில் 29 ஆயிரம் பேருக்கு நிரந்தர விசா கொடுக்கப்படும் போது ஏன் 12 ஆயிரம் பேருக்கு நிரந்த விசா கொடுக்கப்படவில்லை என்ற கேள்வி எழுந்ததது. அதன் அடிப்படையில் தான் முதலில் 12 ஆயிரம் பேருக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் போராட்டம் ஆரம்பமானது. அதேவேளை பலர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்று விட்டனர். சிலருடைய விசாவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த ஜூலை மாதம் ஆஸ்திரேலிய அகதிகள் அமைப்பு விடுத்த அறிக்கையின் படி 9ஆயிரத்து 500 அகதிகள் நிரந்தர விசா இல்லாது உள்ளனர். அந்த அறிக்கையின் எண்ணிக்கையின் அடிப்படையில் தற்போது 9 ஆயிரத்து 500 பேருக்கும் நிரந்தர விசா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றோம்.

**கேள்வி: குறித்த 9 ஆயிரத்து 500 பேரில் எந்தெந்த நாட்டவர்கள் உள்ளனர் ..?**

**பதில்:** குறைந்தது 3 ஆயிரம் பேர் தமிழ் அகதிகள், 2 ஆயிரம் பேர் ஈரான் நாட்டவர்கள். இது ஆஸ்திரேலிய அகதிகள் அமைப்பின் புள்ளி விவரத்தின் அடிப்படையில் எனக்குத் தெரிந்த தகவல். இது கூட எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியாது.




**கேள்வி: இவ்வாறான தெளிவில்லாத தகவல்களின் அடிப்படையை வைத்து கொண்டு 9 ஆயிரத்து 500 பேருக்கும் நிரந்தர விசா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடனான போராட்டம் சரியானதா?**

**பதில்:** அரசாங்கத்துக்கு சரியான எண்ணிக்கை தெரியும் தானே. அதேவேளை அரசாங்கத்தின் புள்ளி விவரங்களை வைத்தே நாம் இவற்றை அண்ணளவாக சொல்லுகிறோம். 9 ஆயிரத்து 500 என்ற எண்ணிக்கை அரசாங்கத்திடம் இருந்து ஆஸ்திரேலிய அகதிகள் அமைப்பு பெற்றுக்கொண்டதுதான். அந்த எண்ணிக்கையின் அடிப்படையிலும் fast track procees இற்குள் அகப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர விசா வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். அதனை விடுத்து அனைத்து தமிழ் அகதிகளையும் அல்லது அனைத்து அகதிகளையும் தொடர்பு கொள்வது என்பது சாத்தியமற்றதாகும்.

**கேள்வி: குறித்த 9ஆயிரத்து 500 பேரில் இந்தியா, பங்களாதேஸ், மலேசியா, இந்தோனேசியா போன்ற உள்நாட்டுப் போர்கள் இடம்பெறாத நாடுகளை சேர்ந்தவர்களும் உள்ளனராமே..?**

**பதில்:** அந்த எண்ணிக்கை வேறு கணக்கில் வருகின்றது. அதாவது அரசாங்கத்தால் படகுவழி வந்தவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டவர்களே குறித்த 9 ஆயிரத்து 500 பேர்.

நீங்கள் குறிப்பிடும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் சுமார் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். நாங்கள் குறிப்பிடும் 9 ஆயிரத்து 500 பேருக்குள், இலங்கை, ஆப்கனிஸ்தான், ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளை சேர்ந்தவர்களே உள்ளனர். பாகிஸ்தானிலும் எல்லைப்புறங்களில வாழும் பல இனங்கள் தலிபான்களின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. அவர்களில் பலர் இங்கு உள்ளனர். மியான்மாரில் இருந்தும் வந்துள்ளனர். நாங்கள் போராடுவது அகதிகளுக்காக. மாறாக சுற்றுலா விசாவில் வந்த அகதிக்கோரிக்கையாளர்களுக்கல்ல.

**கேள்வி: படகுவழி வந்தவர்களில் இந்தியர்களும் உள்ளனராமே..?**

**பதில்:** எனக்குத் தெரிந்தளவில் 5-10 பேர்வரை இருக்கலாம். பெரிதளவில் இல்லை.

**கேள்வி: குறித்த 9 ஆயிரத்து 500 பேருக்கும் விசா வழங்கக் கோருகிறீர்கள். அவர்களில் குற்றப் பின்னணி உள்ளவர்களுக்குமா.?**

**பதில்:** நீண்ட காலமாக இந்த சமூகத்துக்காக பங்காற்றிக் கொண்டிருக்கும் அகதிகளுக்கு விசா வழங்கக் கோருகிறோம். அதேவேளை விசா வழங்கும் போது அரசாங்கம் குற்றப் பின்னணிகள் குறித்து ஆராயும். குற்றப்பின்னணியுடையவர்களுக்கு விசா நிராகரிக்கப்படும். அதேவேளை 9 ஆயிரத்து 500 பேரும் குற்ற பின்னணி கொண்டவர்களாக இருப்பின் அவர்கள் சிறைக்குள் இருந்திருப்பர். எங்களுடைய நோக்கம் fast track prosesse இல் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வு ஒன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இதையே நாம் நியாயமான கோரிக்கையாக முன்வைக்கிறோம்.

**கேள்வி: சிட்னி-அடிலைட்- பிரிஸ்பேர்ண் போன்ற நகரங்களில் நடைபெறும் போராட்டங்களின் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மெல்பேர்ண், போராட்ட ஒருங்கினைப்பாளர்களுக்குமிடையில் தொடர்பாடல்கள் குறைவா அல்லது இல்லையா..?**

**பதில்:** மாநில ரீதியாக ஒரு இணைப்பாளர் குழு இருக்கிறது. அந்தக் குழு போராட்ட நடவடிக்கை குறித்து பேசிக்கொண்டே இருக்கிறது. அண்மையில் அடிலைட் மற்றும் பேர்த் நகர போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மெல்பேர்ண் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். சிட்னி போராட்டத்தின் பின்னணி குறித்து தெளிவு படுத்த வேண்டும். சிட்னி தமிழ் அகதிகள் கழகத்தினருடன் சேர்ந்து அகதிகளைத் தொடர்பு கொண்டு போராட்டத்தை முன்னெடுக்க முயற்சிகளை மேற்கொண்டது மெல்பேர்ண் ஒருங்கிணைப்பாளர்கள்தான். ஆனால் மாநில ரீதியாக அவர்கள் தாங்கள் சுயமாக முடிவுகளை எடுக்க முடியும். உதாரணமாக சிட்னி போராட்டத்தில் சத்தமாக குரலெழுப்பி போராடுவதில்லை என்ற முடிவை அவர்கள் எடுத்தார்கள். ஆனால் மெல்பேர்ணி அப்படி அல்ல. சூழ்நிலைகளைப் பொறுத்து போராட்டம் மாறுபடும். ஆனால் குறிக்கோள் ஒன்றுதான். அதில் மாற்றம் இல்லை.

**கேள்வி: பிரியா நடசேன் குடும்பத்துக்கு வழுங்கப்பட்டதை போல 9 ஆயிரத்து 500 பேருக்கும் விசா கொடுக்க வேண்டும் என்றும் சிட்னியில் அமைச்சரை சந்தித்த சிட்னி ஒருங்கிணைப்பாளருக்கு அறிவுறுத்தும் வகையில் காணொளி ஒன்றை வெளியிட்டிருந்தீர்கள்: அமைச்சரை சந்திப்பதற்கு முன்னர் அவருடன் எவற்றைப் பேச வேண்டும் என்பது குறித்து ஒருங்கிணைப்பளார்களுக்கிடையில் கலந்துரையாடுவதில்லை என்ற சந்தேகம் இதனால் எழுகின்றதே?**

**பதில்:** நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பல சந்திப்புகள் நடைபெற்றுகொண்டுதான் இருக்கின்றன. சில சந்திப்புகளின் போது சரியான முறையில் கேள்விகள் கேட்கப்படவில்லை என்றால் அது குறித்து தெளிவுபடுத்துவது போராட்டத்தை இன்னும் சரியான பாதையில் எடுத்துச் செல்லும் என்று நம்புகின்றேன். பிரியா நடசேனுக்கு ஆஸ்திரேலிய சமூகம் எவ்வாறு குரல்கொடுத்ததோ அவ்வாறே போராடும் அகதிகளுக்கு பின்னாலும் ஆஸ்திரேலிய சமூகம் உள்ளது. அவ்வாறு இருக்கும் போது ஏன் பிரியா நடசேனுக்கு வழங்கியதை போல ஏனையோருக்கும் விசா வழங்க முடியாது?

**கேள்வி: fast track நடைமுறை மற்றும் AAt ஆகியன கலைக்கப்பட்டுவிட்டனவே..?**

**பதில்:** அவை கலைக்கப்பட்டுவிட்டன. ஆனால் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வு வழங்கப்படவில்லை. இந்த அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை. ஆனால் செய்வதைப் போல காட்டிக்கொள்கிறது.

**கேள்வி: இந்த அரசாங்கம் அகதிகளுக்கான தீர்வை தேர்தலுக்கு முன்னர் அறிவிக்கும் என நம்புகிறீர்களா..?**

**பதில்:** ஜூலை மாதம் ஏன் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தோமெனில் அடுத்த முறை லேபர் ஆட்சிக்கு வருமா என்பது சந்தேகம். அதனால் தான் அதற்கு முன்னர் ஒரு தீர்வை பெற்று கொள்ள வேண்டும் என்று போராடுகிறோம்.

வாழ்க்கைச் செலவு, வட்டி வீத அதிகரிப்பு போன்றவை இந்த அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு காரணமாகலாம். மறுபுறத்தே குடிவரவாளர்களை குறிவைத்து தனது பிரசாரங்களை ஆரம்பித்துள்ளார் பீட்டர் டட்டன். ஆட்சி மாற்றம் வந்தால் இந்த 9 ஆயிரத்து 500 அகதிகளுக்கும் மரண தண்டனைக்கு ஒப்பான காலமாக இருக்கும். எங்களுக்கு இந்தத் தேர்தலுக்கு முன்னரே தீர்வைத் தரலாம். ஆர்ப்பாட்டம் போட்டு தரவேண்டிய அவசியம் இல்லை. அமைச்சரிடம் பல அகதிகளின் மனு கையளிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான தீர்வை அவர் வழங்க முடியும். நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை மீளப் பெறலாம். இவற்றை செய்வதற்கு சட்ட மாற்றம் தேவையில்லை.

**கேள்வி: இந்தப் போராட்டம் ஒரு புறமிருக்க, நீங்கள் ஒரு மாற்றுக்கட்சி அதாவது சோசலிச இயக்கத்தை சேர்ந்தவர். நீங்கள் லேபர் கட்சியை குறிவைத்து தாக்குவது லேபர்கட்சியை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றும் முயற்சியா? உங்கள் தொடர்ச்சியான போராட்டத்தின் ஊடாக லேபர்கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு சரியாதா..?**

**பதில்:** நான் ஒரு சோசலிசப் போராளி. எனக்கு நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை இல்லை. பணக்காரர்களும் பெரிய செல்வந்தர்களும், அரசியல்வாதிகளை கைக்கூலிகளாக தேர்ந்தெடுத்து தங்களுக்கான சாதகமான முடிவுகளை எடுக்கிற ஒரு இடமாகத் தான் நான் நாடாளுமன்றத்தை பார்க்கிறேன். நாடாளுமன்றத்தின் ஊடாக மக்களுக்கு தீர்வுகிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

2022 ஆம் ஆண்டு சோசலிச இயக்கத்தின் செனட் சபை உறுப்பினராகப் போட்டியிட்டேன். அதற்கு காரணம் லேபர் ஆட்சிக்கு வர வேண்டும். லேபருக்கு ஆதரவாக நாங்கள் பிரசாரம் செய்ய முடியாது. அதேவேளை அகதிகளுக்கு ஆதரவானவர்களை திரட்டி லிபரலுக்கு எதிரான பிரசாரமாகத்தான் நாம் அதனை எதிர்கொண்டோம். சோசலிசவாதிகள் அடிமட்ட மக்களுக்கானவர்கள். லிபரலை விட லேபர் ஆட்சி மக்களுக்கு சாதகமானதுதான். ஆனால் லேபர் விடும் தவறுகளை நாம் சுட்டிக்காட்டுவோம். சோசலிசவாதிகளுக்கு லேபரை ஓரங்கட்ட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. அகதிகள் பிரச்சினையில் 2009 ஆம் ஆண்டுமுதல் போராடிக்கொண்டுதான் இருக்கிறேன். லிபரல் ஆட்சியில்தான் நான் பல போராட்டங்களில் பங்கெடுத்துள்ளேன்.

**கேள்வி:தமிழ் ஏதிலிகள் கழகத்தில் உங்களுடைய பங்கு..?**

**பதில்:** அந்த அமைப்பை உருவாக்கியதால் என்னை நிறுவுநர் என்றழைப்பர். ஆனால் இந்த அமைப்பில் யாரும் தலைவர்கள் கிடையாது. ஆனால் பேச்சாளர்களாக நான் மற்றும் ரதி, தனு ஆகியோர் இருக்கிறோம். இது குழுவாகச் செயற்படும் ஓர் அமைப்பு.

**கேள்வி: அரண் மயில்வாகனம் முன்னெடுக்கும் போராட்டத்தில் யாரும் உள்நுழைந்து பெயரெடுக்க கூடாது என்று நினைக்கிறீர்களா..?**

**பதில்:** நான் முன்னெடுக்கும் போராட்டங்களில் நான் மட்டும் தலைமையாக இருக்கமாட்டேன். பலர் தலைமைத்துவத்தை எடுத்திருப்பார்கள். அந்தவகையில் மெல்பேர்ண் போராட்டத்தில் ரதி, தனு, மகிந்தன் பிரசாந் போன்றோர் தலைமையேற்றுள்ளனர். முடிவுகள் எடுப்பது கூட ஜனநாயக ரீதியாக



தான் எடுப்போம். அதே நேரத்தில் அரண் மயில்வாகனம் வழிநடத்தும் போராட்டத்தில் வெளிநபர்கள் உள்நுழைந்து குழப்பங்களை உண்டு பண்ணும் செயற்பாடுகளுக்கும் நான் ஒரு போதும் அனுமதியளிக்கமாட்டேன். அதேவேளை லேபர்கட்சியை சேர்ந்தவர்களோ வேறுஅரசியல் கட்சி பின்புலங்களை கொண்டவர்களோ வந்து போராட்டங்களை திசை திருப்புவதற்கும் வழி விட மாட்டேன்.

**கேள்வி: நீங்களும் ஒரு இடதுசாரி, இலங்கையின் ஜனாதிபதியும் ஒரு இடதுசாரி தானே?**

**பதில்:** மார்க்சியவாதி என்றால் ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுப்பவர்கள். ஆனால் ஜேவிபி அப்படியல்ல. 80 களிலேயே சிங்களப் பேரினவாதச் சிந்தனையை - இனக்கலவரத்தை ஊக்குவித்ததில் ஜேவிபியின் பங்கும் அதிகம்.

70 களில் ஜேவிபியின் முன்னோடியாக இருந்த லயனல் போபகே தற்போது மெல்பேர்ணில் இருகிறார். அவர் ஜேவிபியை விட்டு விலகியதற்கான காரணம் தமிழர்கள் குறித்து அந்த அமைப்பு எடுத்த முடிவே.

அதுமட்டுமின்றி சமாதானப் பேச்சுகளை குழப்பவும் முயன்றது ஜேவிபி. மகிந்தவின் ஆட்சிக்கு முட்டுக் கொடுத்ததும் ஜேவிபியே. ஆகவே அவர்களை ஒரு மார்க்சிய இயக்கம் என்று சொல்லிக்கொள்ள முடியது.

ஒடுக்கப்பட்ட மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பவன்தான் ஒரு மார்க்சிய வாதியாக இருக்க முடியும்.

ஆஸ்திரேலியா எதிரொலி ETHIROLI





# கனி(றி) இருப்ப லட்டு கவர்ந்தற்று

● ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

நாம் நிஜமாக எதையும் பார்ப்பதேயில்லை. ஸ்மார்ட் போன் திரையைப் போல இந்த உலகத்தையும் ஸ்க்ரோல் செய்து விடுகிறோம்.. நாம் எதையும் அவதானித்துப் பார்க்காததால் பூமிக்கும் நமக்குமான உறவு பலவீனப்பட்டுள்ளது. கூடவே வாழ்க்கையின் வேகமும் உயர்ந்துள்ளது. அது அனுபவங்களிலும் எதிரொலிக்கிறது. ஆகவே சாரம் நம்முள் இறங்குவதில்லை. மேலோட்டமான தளமே இதமளிப்பதாக உள்ளது. இப்போது நாம் வியப்பதில்லை, மாறாக ஆழமாகச் சந்தேகிக்கிறோம். அப்புறம் மற்றமை மீதான கரிசனமின்மை, சுயநலத்தின் பொருட்டு உண்டாகும் செவி கேளாமை, நுகர்ந்து நுகர்ந்து தன்னழிவை இன்பத்துக்காக நுகரும் அவலம், இன்றை எதிர்கொள்ளத் திராணியற்றுக் கடந்த காலத்திற்குத் திரும்புவதற்கான பிரேமை, தகவல்களின் காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுதல், அழகிலிருந்தும் உண்மையிலிருந்தும் அந்நியப்படுதல், தீராத பறதி (பதற்றம்), அதீத செயல்வெறி. இவைதான் ஏறத்தாழ இக்காலகட்டத்தின் குணங்கள் என்று தோன்றுகிறது. “ வே.நி.சூர்யா

முதலில் இரண்டு சம்பவங்களை பற்றி சொல்லிவிட்டு இந்தக் கட்டுரையினைத் தொடங்கலாம் என்று நினைக்கிறேன். சில வருடங்களுக்கு முன்பு எனது நண்பர் ஒருவர் தங்கள் வீட்டில் நடக்கும் நவராத்திரி கொலுவிற்கு அழைத்திருந்தார். அங்கு சென்றபொழுது எனக்கு ஒரு அதிர்ச்சி. ஒரு குறிப்பிட்ட சமூகத்தை தவிர யாரும் அங்கில்லை. எனது பெயரை வைத்து அவர் முன்முடிவு செய்து அவர்கள் அழைத்திருந்தனர் என்றும் நான் அசைவம் சாப்பிடுபவன் என்று தெரிந்ததும் அங்கே நான் மிக நைச்சியமாக தவிர்க்கப்பட்டதையும் உணர்ந்தேன். இந்த சம்பவத்திற்கு பிறகு நண்பர் என்னிடம் பேசுவதையே விட்டுவிட்டார். ஒருவேளை நான் மாமிசம் சாப்பிடுபவன் என்பதாலோ?. என்ன காரணம் என்பதை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

இரண்டாவது சம்பவம் எனது நண்பர் ஒருவரை வீட்டிற்கு அழைத்திருந்தோம். அவர் சைவம் . நாங்களோ சைவம் சமைத்திருந்தாலும் எங்களுக்கு ஒரே சங்கடம். ஏதாவது சொல்வாரோ என்று. ஆனால் அவரோ அதைக் கொஞ்சம் கூட பார்க்கவில்லை. சைவம் ,அசைவம் எல்லாம் மனசு தான் காரணம் . எனக்கு அதெல்லாம் பிரச்சினை கிடையாது என்று கூறிவிட்டு மிக நன்றாகச் சாப்பிட்டு விட்டுச் சென்றார். இதை எதற்காக சொல்கிறேனென்றால் சமூகம் ,இனம் ,மதம் சார்ந்த சில மனிதர்களின் நடவடிக்கைகளை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்தமான முன்முடிவுகளுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான்.

கடந்த ஒரு மாதமாக இந்தியாவில் பெரும்புயலைக் கிளப்பிய விஷயம் லட்டும் அதைச் சார்ந்த அரசியலும் தான்.கடந்த மாதம் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி விஜயவாடாவில் நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில் முதல்வர் சந்திரபாபு நாயுடு, முந்தைய வை.எஸ்.ஆர் .காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திருப்பதி திருமலை கோயிலில் பிரசாதத்தில் பயன்படுத்தப்பட்ட நெய்யில் விலங்குகளின் கொழுப்பு கலப்படம் செய்யப்பட்டதாகக் குற்றம்சாட்டினார். நாயுடுவின் இந்த குற்றச்சாட்டு ஆந்திராவில் மட்டுமின்றி இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து சமூக ஊடகங்களிலும் ,பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டத்தொடங்கினர். எதிர்க்கட்சியினர் அனைவரும் ஆய்வகப் பரிசோதனை விபரங்களை வெளியிட வேண்டும் கோரிக்கை விடுத்ததையடுத்து , 19ஆம் திகதி தெலுங்கு தேசம் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆனம் வெங்கடரமண ரெட்டி, குஜராத்தில் உள்ள தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தில் திருப்பதி லட்டு மீது நடத்தப்பட்ட சோதனைகளின் அறிக்கைகளின் நகல்களை வெளியிட்டார். திருப்பதியில் பிரசாதமாக வழங்கப்படும் லட்டு ‘மாதிரி’யில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவானது , லட்டு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட நெய்யில் மாட்டிறைச்சிக் கொழுப்பு, பன்றிக்கொழுப்பு மற்றும் மீன் எண்ணெய் இருந்ததாக இந்த ஆவணம் கூறுகிறது என்று பேரதிர்ச்சியை கிளப்பினார். நம்மவர்களும் அந்த ஆய்வின் அறிக்கையை முழுதாக படிக்காமல் ஒரு பக்கம் சங்கிகளும் ,இன்னொரு பக்கம் கழகக் கண்மணிகளுக்கு ஒருவரையொருவர் தாக்கி சமூக ஊடகங்களில் பிரசாரம் செய்தனர். எந்த ஒரு விஷயத்தையும் முழுதாக ஆராய்ந்து அதன் பின்னணி என்னவென்று சொல்வது நமது கடமை அல்லவா.

சுத்தமான நெய்யின் தரத்தினை அறிந்து கொள்வதற்கு நெய்யின் எஸ் மதிப்பை கணக்கிடுவது வழக்கம். இந்த எஸ் மதிப்பானது நிர்ணயிக்கப்பட்ட நெய்யின் ‘எஸ்’ மதிப்பீட்டிற்கு குறைவாகவோ, அதிகமாகவோ சோதனை முடிவுகள் வரும் பட்சத்தில் அந்த நெய்யில் ஏதேனும் கலப்படம் இருக்கலாம் என்பது தெளிவாகும் . திருப்பதி தேவஸ்தானம் அனுப்பிய நெய் மாதிரிகளை ஆய்வு செய்த போது ஐந்து மாதிரிகளும் எஸ் தர மதிப்பீட்டு சோதனையில் தேர்ச்சி பெறவில்லை. அந்த எஸ் அளவீடுகள் பின்வருமாறு

| மாதிரி எண் | S-மதிப்பு | நிர்ணயிக்கப்பட்ட S மதிப்பு வரம்பு |
|---|---|---|
| 1 | 86.62 | 98.95 முதல் 101.95 வரை |
| 2 | 106.89 | 99.42 முதல் 100.58 வரை |
| 3 | 22.43 | 95.90 முதல் 104.10 வரை |
| 4 | 117.42 | 97.96 முதல் 102.04 வரை |
| 5 | 19.72 | 95.68 முதல் 104.32 வரை |

ஒவ்வொரு எஸ் மதிப்பின் சமன்பாட்டிற்கான கலப்பட கொழுப்புகளின் அட்டவணை

| மாதிரி எண் | கலப்படுத்தப்பட்ட கொழுப்புகள் |
|---|---|
| 1 | சோயா பீன், சூரியகாந்தி, ஆலிவ், காட்டுக்கடுகு, ஆளி விதை, கோதுமை தோல் , சோளக் தோல் , பருத்தி விதை, மீன் எண்ணெய் |
| 2 | தேங்காய் மற்றும் பனந்தோல் கொழுப்பு |
| 3 | ‘பா ம்’ எண்ணெய் , மாட்டிறைச்சி கொழுப்பு |
| 4 | பன்றிக்கொழுப்பு |
| 5 | மொத்தமாக எல்லாமும் |

இந்த மதிப்பீடுகளை மட்டுமே வைத்துக்கொண்டு சந்திரபாபு நாயுடு கட்சியினரும், அவரது கூட்டணி கட்சியினரான சங்கிகளும் கடந்த ஒரு மாதமாக இந்திய முழுவதும் வெறுப்பு அரசியலை உமிழ்ந்தனர். உண்மையில் இந்த ஆய்வு முடிவுகளில் ‘எஸ் மதிப்புகளுக்கான காரணங்கள் என்னவாக இருக்கலாம் ’ என்பதையும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் கீழ் செயல்பட்டு வரும் சி.ஏ.எல்.எப். ஆய்வகம் மிகத்தெளிவாக விளக்கியுள்ளது .அதை யாரும் படித்ததாகத் தெரியவில்லை.

இந்த ஆய்வு முடிவுகள் சில சமயங்களில் தவறான நேர்மறையான ( False Positive ) முடிவுகளை வழங்குவதற்கும் வாய்ப்பிருக்கிறது . பின்வரும் காரணிகளால் தவறான முடிவுகள் வருவதற்கு சாத்தியமுள்ளது.

1. பசு அல்லது எருமை நாட்டிலிருந்து எடுக்கப்பட்ட பால் பயன்பாடு

2. ஒற்றைப் பசு மாட்டிலுருந்து எடுக்கப்பட்ட பாலிலிருந்து பெறப்பட்ட நெய்

3.காட்டுக்கடுகு எண்ணெய், பருத்தி அல்லது பாமாயில் போன்ற தாவர எண்ணெய்கள் தீவினங்களை மிகுதியாக உட்கொண்ட மாடுகளிருந்து பெறப்பட்ட நெய்

4. தீவிரமான உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட பசுவிலிருந்து பெறப்பட்ட பாலில் உருவான நெய்

5 .சீம்பாலிருந்து பெறப்பட்ட நெய்

6.கொழுப்புகளை தொழில்நுட்ப சிகிச்சைகளுக்கு உட்படுத்தி அகற்றியபிறகு பயன்படுத்தப்பட்ட பால்

7. கொழுப்பு சிதைவு அதிகரித்த பாலாடைக்கட்டிகளிலிருந்து பெறப்பட்டமை

8. Gerber, Weibull-Berntrop அல்லது Schmid-Bondzynski தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி பிரித்தெடுக்கப்பட்டது அல்லது சோப்பு பயன்படுத்தி தனிமைப் படுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்ட ஏதாவது காரணங்களால் முடிவுகள் தவறாக வருவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. மிருகக் கொழுப்பு தான் நெய்யில் கலந்துள்ளது என்று 100 சதவிகிதம் நிறுவுவதற்கு வாய்ப்பு என்றே எல்லா நிபுணர்களும் சொல்கின்றனர்

வெகு எளிதாக தீர்க்க வேண்டிய விஷயங்களை அரசியலாக்குவதற்கு என்ன தேவை இருக்கிறதென்றே தெரியவில்லை. ஜனசேனா தலைவரும், துணை முதல்வருமான பவன் கல்யாண் தொடர்ச்சியாக மிரட்டல்களை விடுத்துவருகிறார் . சனாதனத்தை காக்க வேண்டிய நேரமிது என்று தூளுரைக்கிறார். இந்த மாதிரி கோமாளிகளிடமிருந்து தான் சனாதனத்தையும் ,இந்திய ஒருமைப்பாட்டையும் காக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது . நடிகர் அஜித் குமார் பயணம் குறித்தான ஒரு பேட்டியில் ஒரு மகா உண்மையை நமக்கெல்லாம் புரியும்படி மிக எளிதாகக் கூறினார் .அதாவது “ நீங்கள் இதுவரை சந்திக்காத மனிதர்களை வெறுக்க வைக்க உங்களை தூண்டுவது மதமும்,சாதியும் மட்டுமே . நாம் ஒருவரை சந்தித்து அறிந்து கொள்வதற்கு முன்பே முன்முடிவுகளை கொண்டு அவர்களை மதிப்பிடுகிறோம்..” ஆமாம் எந்த விதமான முன்முடிவுகளை கொண்டு எந்த முடிவுக்கும் வராமல் ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து, கலந்துரையாடி , மத,இன வேறுபாடுகளை களைந்து நமது ஒற்றுமையினை பிரிவினைவாதிகளிடமிருந்து தக்கவைத்துக்கொள்ள வேண்டிய தருணமிது.

Best Start
Best Life





இலவசக் கின்டர்: உங்கள் குழந்தையை 2025 ஆம் ஆண்டிற்காப் பதிவு செய்யுங்கள்

விக்டோரியாவில் மூன்று மற்றும் நான்கு வயது குழந்தைகளுக்கு இலவசக் கின்டர் கிடைக்கிறது. இதனால் ஒரு குழந்தைக்கு ஆண்டு ஒன்றிற்கு $2,563 வரை குடும்பங்களால் சேமிக்க முடியும்.

இரண்டு ஆண்டுகளுக்கான கின்டர் உங்கள் பிள்ளை அவர்களின் முக்கிய திறன்களை வளர்த்துக் கொள்ள உதவும், எனவே அவர்கள் பள்ளியிலும் வாழ்க்கையிலும் சிறப்பாகச் செயல்படுவார்கள்.

இலவசக் கின்டர் அனைவருக்குமானது . உங்களுக்குச் சுகாதாரப் பராமரிப்பு அட்டை அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது அது போன்றவை) தேவையில்லை.

மேலும் தகவல்களை அறிய இங்கு பார்வையிடுங்கள் vic.gov.au/kinder/tamil

THE EDUCATION STATE

VICTORIA State Government | Department of Education

KINDERGARTEN

CEYLON EXPRESS

MONEY TRANSFER

❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer



127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# ராவண உருவ எரிப்பு; சரியா? தவறா?



● சுமதி-கான்பரா

கண்டம் விட்டு கண்டம் தாண்டி வந்தாலும், இந்தியர்கள் தங்கள் பாரம்பரியத்தை விட்டுக்கொடுப்பதில்லை. ஊரில் இருந்த பொழுது என்னென்ன கலாசாரங்களைப் பின்பற்றினார்களோ, அதையே எங்கு சென்றாலும் முடிந்தவரை பின்பற்ற நினைக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக முக்கியமான விழாக்களை பெருமளவில் முன்னெடுக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு சிறப்பான விழா இருக்கின்ற பொழுதிலும், இந்தியா முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு விழா என்றால் அது தீபாவளி தான்.

உண்மையில் தீபாவளி அனைத்து இந்துக்களுக்கான விழாதானா? என்ற கேள்வி எழுந்தாலும், அதனை கடந்து விட்டு பார்த்தால், பெரும்பான்மை இந்தியர்கள் வெளிநாடுகளில் ஒன்று கூடுவதற்கான ஒரு முன்னெடுப்பாகவே இந்த விழாவினைக் காணலாம். அதற்காகவே அனைத்து இந்தியர்களும் அந்த விழாவைக் கொண்டாடலாம். ஆனால்அப்படி ஒரு விழாவில், அதே மதத்தை சேர்ந்த ஒரு பிரிவினர் தெய்வமாக / தலைவனாகக் கொண்டாடும் ஒரு உருவத்தை எரிப்பது என்பது எந்த விதத்தில் அறமாக இருக்க முடியும்?

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்தியர்கள் தீபாவளி என்றால் தீப ஒளி, தீமைகளை அகற்றி நல் எண்ணங்களை விதைக்கும் நாள் என்று சொல்லிக் கொண்ட போதும், அநேக இந்துக்களுக்கு தீபாவளியை பற்றி சொல்லப்பட்ட கதை, நரகாசுரன் கொல்லப்பட்ட நாள். வடநாடு இந்துக்கள் “ராமலீலா” என்று கொண்டாடுகிறார்கள். நரகாசுரனுக்கு பதிலாக ராவணனின் உருவ எரிப்பு விழா.

ராவணனை தீமையின் மொத்த உருவமாக சித்திரித்து, தீமையை எரிப்பதாக ராவணனின் உருவத்தை எரிக்கிறார்கள். மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்ற குரல் உலகெங்கிலும் ஒலித்துக் கொண்டிருக்கும் நூற்றாண்டில், இன்னமும் ஒரு மனிதனை தீமையின் சின்னமாக சித்திரித்து அவன் உருவத்தை எரித்து, நம் குழந்தைகளுக்கு என்ன சொல்ல முயற்சிக்கிறோம் என்பதை பெற்றோர் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அது ஒருபுறம் இருக்க, உண்மையில் ராவணன் தீமையின் அடையாளம் தானா? இதைத் தெரிந்து கொள்ள ராமாயணத்தை படிக்கலாம் என்றால் அதில் ஒரு சிக்கல் உள்ளது. பல்நூற்றுக்கணக்கான ராமாயணக் கதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் சிறிய அளவில் இருந்து பெரிய அளவில் வேறுபாடுகளைக் கொண்டவை.ஒரு கதையில், சீதைக்கு ராமன் சித்தப்பன், ஒரு கதையில் ராவணன் மகள் சீதை, ஒரு கதையில் ராவணன் காதலித்த பெண் சீதை. இதைப் போல பல மாறுபட்ட பிரதிகள் உள்ளன. ராமாயண கதைக்குள் செல்லாமல் ராவணனின் குணங்களை மட்டும் எடுத்து பார்த்தால் உண்மையில் இவனையா தீமையின் அறிகுறியாக சித்திரிக்கிறார்கள்? என்றே தோன்றும்.

ராவணனை மிஞ்சிய சிவ பக்தனை காண இயலாது. அப்படி ஒரு பக்திமானை தீமையின் நீட்சியாக சித்தரிப்பதே விசித்திரமாக இருக்கிறது. கடவுளின் மேல் அளவுக்கதிமான பக்தி உடைய ஒரு மனிதன் அரக்கனாக இருக்க வாய்ப்பிருக்கிறதா என்பதை பக்தர்கள், கடவுள் நம்பிக்கை உடையவர்கள் சிந்தித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

மகளோ, காதலியோ, தங்கைக்காக பழிவாங்கவோ, எதுவாக இருந்தாலும், சீதை, ராவணனால் மிகக் கண்ணியமாகவே நடத்தப்பட்டாள் என்றே அனைத்து கதைகளும் பதிவு செய்கின்றன. ஒரு பெண்ணை அவள் விருப்பம் இல்லாமல் கவர்ந்து வருவது குற்றம் தான்,அது என்ன நியாயமான காரணமாக இருந்தாலும். ஆனால் அவள் மேல் தன் விரல்நுனி கூட படாமல் பார்த்து கொண்ட ராவணன் கண்ணியமானவனாகவே தென்படுகிறான்.

மறுபுறம், இப்படி ஒரு கண்ணியவானை ஒருவன் வதம் செய்தது ஆண்டாண்டு காலமாய் கொண்டப்படுகிறது என்றால், ராவணனை வதம் செய்த ராமன் எவ்வளவு நல்லவனாக இருப்பான் என்று எண்ணி ராமாயணக் கதையைப் படித்தால், ராமன் மிக பெரிய ஏமாற்றத்தையே கொடுக்கிறான். ராவணனால் ஒரு சிறு கீறல் கூட ஏற்படாமல் பாதுகாப்பாக இருந்த சீதையை, அவளின் கற்பை நிரூபிக்க தீக்குண்டத்தில் இறக்கியவன் ராமன். இதை ராவணன் உருவத்தை எரிப்பவர்கள் கூட மறுக்க முடியாது. கட்டிய மனைவியை சந்தேகித்து தீக்குழியில் இறக்கிய ராமனுடன் வாழ்ந்த சீதை காட்டிற்கு அனுப்பப்பட்டு, இறுதியில் ராமனுடன் வாழ முடியாமல் பூமிமாதாவே வாய் பிளந்து அவளை அழைத்துச் செல்வாள்.

இப்படிப்பட்ட ராமனைக் கொண்டாடுவது அவரவர் விருப்பம் மற்றும் நம்பிக்கை. அப்படிப்பட்டவனை கொண்டாட ஒரு பகுதி மக்கள் இருக்கும் பொழுது, ராவணனை கொண்டாட மக்கள் இருக்க மாட்டார்களா என்ன.ராவணனைத் தங்களின் தெய்வமாகவும் தலைவனாகவும் கொண்டாடும் மக்கள் பலர் இருக்கிறார்கள்.

இந்தியாவில் ராவணனைக் கடவுளாக வழிபாடும் கோவில்களில் சில :

தக்ஷணன் கோவில் - கான்பூர் , ராவண் கிராம் ராவண கோவில் - விதிஷா, காங்கரா - இமாச்சல பிரதேசம், ராவண மந்திர் - பிஸ்ரக், உ.பி., காக்கிநாடா ராவண கோவில் - ஆந்திரா, மண்ட்சார் - எம். பி, காட்சிரோலி - மகாராஷ்டிரா. தமிழ்நாட்டில் சேலம், மீனாட்சிபுரம், புதுக்குளம், முருகத்துரான் பட்டியிலும் ராவணன் கோவில் அமைந்துள்ளன. இவை தவிர மற்ற சில கோவில்களிலும் ராவணனின் சிலைகள் உள்ளன. சில பழங்குடியின மக்கள் ராவணனைத் தங்கள் குலதெய்வமாக கொண்டாடி வருகிறார்கள்.

ராவண உருவத்தை எரிப்பது தங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் செயலாகவே சில சாதியினரால் கருதப்படுகிறது. மஹாராஷ்ட்ரிய மாநிலத்தில் மூவாயிரத்துக்கும் மேலான பழங்குடி மக்கள் ஒவ்வொரு ஆண்டும் ராவணன் படத்தை வைத்து வழிபடுகிறார்கள். அதே சமயம், ராவணனின் உருவ எரிப்பை தடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். கமால்பூர், ரஞ்சி, பெந்திரி, மலதாஹிர் போன்ற கிராமங்கள் ராவணனை வழிபடுபவர்கள். ஆரிய ஆதிக்கத்தை எதிர்த்து நிற்பவர்களை இழிவு படுத்தும் குறியீடாகவே ராவணன் உருவ எரிப்பு நிகழ்கிறது.

அப்படி பல்வேறு மொழி பேசும் மக்களால் கொண்டாடப்படும் ராவணனின் உருவத்தை எரிப்பது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல. அதை ஆஸ்திரேலியாவில் நடத்த போவது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குயின்ஸ்லாந்து மாநிலத்தின் ஒரு பிரிவினர் ராவணன் உருவத்தை எரிப்பதை எதிர்த்து களம் கொண்டிருக்கிறார்கள் தமிழர்கள். தீபாவளிக் கொண்டாட்டத்தின் பொழுது ராவணனை தெய்வமாக வழிபடும் மக்களின் நம்பிக்கையை இழிவு படுத்தும் செயல் என்ற அடிப்படையில், பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டமும், குயின்ஸ்லாந்து தமிழ் மன்றங்களும் இணைந்து போர் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதால் ராவண எரிப்பு நிகழ்வைத் தடுப்பதில் கொஞ்சம் கால தாமதமானாலும், நிச்சயமாக அந்நிகழ்வு தடுத்து நிறுத்தப்படும் என்றே நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

கலாசாரம் என்ற பெயரில், ஆஸ்திரேலியா வாழ் இந்தியர்கள், ஒரு பிரிவினரின் நம்பிக்கையை அவமதிக்கும் விதமாக இங்கேயும் ராவணன் எரிப்பை முன்னெடுப்பது, இந்தியார்களுக்குள் சலசலப்பை ஏற்படுத்தாமல் இல்லை. அனைத்து இன, மொழி, நிற மக்களையும் அரவணைத்து செல்லும் ஆஸ்திரேலியா போன்ற ஒரு மதசார்பற்ற நாட்டில், ஒரே வேரை கொண்ட இருவேறு பிரிவினர்களில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை, தெரிந்தோ தெரியாமலோ, சிறுமைபடுத்துவதும், தங்கள் நம்பிக்கையை மற்றொரு பிரிவினர் மேல் திணிக்கும் செயலை எதிர்த்து குரல் கொடுப்பதே அறமாக இருக்கும்.

தமிழர்கள் மட்டுமில்லை, பொதுவாக பெண்களிடம் பெயரை குறிப்பிடாமல் ராமன் மற்றும் ராவணனின் குணாதிசயங்களைத் தெரிவித்தால், அவர்கள் தங்களுக்கோ தங்கள் பெண்களுக்கோ ராவணனை போன்ற ஒரு துணையைத் தான் தேர்ந்தெடுப்பார்கள்.

ஒருவேளை, ராவணன் அநீதி விளைத்தவனாகவே இருந்தாலும், ஒரு உருவத்தை எரிப்பதன் மூலம் வன்முறை அல்லாமல் இளநெஞ்சங்களில் வேறு என்ன விதைக்க போகிறோம்? அனைத்து மதங்களும் அன்பையே போதிக்கின்றன. அவ்வழியில் இது போன்ற அழிக்கும் செயல்களை நம் இளம் பிள்ளைகளுக்கு கடத்தி விடக்கூடாது.

உலகெங்கிலும் வாழ்ந்த பல சர்வாதிகாரிகள் மரணத்தை நாகரீக சமூகம் கொண்டாடுவதில்லை. அப்படி இருக்க, பல மக்களுக்கும் தெய்வமாக விளங்கும் ராவணனை எரிப்பதை பொதுமக்கள் ஒன்று கூடி தடுத்தே ஆக வேண்டும்.



அ.முத்துக்கிருஷ்ணன்

# மூன்றாம் உலகப் போரை நோக்கிச் செல்கிறோமா?

இஒக்ரோபர் 7, 2023 ஆம் ஆண்டு ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது மிகப்பெரும் தாக்குதல் நிகழ்த்தியதில் இருந்து பாலஸ்தீனத்தில் பெரும் போர்ச் சூழல் உருவாகியது. இந்தப் போர்ச் சூழல் அங்கே 2023 இல் தொடங்கவில்லை மாறாக 76 ஆண்டுகளாக, இஸ்ரேல் என்கிற நாடு உருவாகியது முதலே அந்த நிலத்தில் பதற்றம் தொற்றிக் கொண்டது. இஸ்ரேல் கொஞ்சம் கொஞ்சமாக பாலஸ்தீனர்களை அவர்களின் தாயகத்தில் இருந்து விரட்டியது, அவர்கள் உலகில் பல நாடுகளில் அதிகளாக வாழ்வதும் நம் காலத்தின் பெரும் துயரம்.

பாலஸ்தீனம் என்கிற நாடு கொஞ்சம் கொஞ்சமாக உலக வரைபடத்தில் இருந்து காணாமல் போனதும் இன்று அவர்கள் காசா மற்றும் மேற்கு கரையில் சிறிய திட்டுகளில் வாழ்ந்து வருவதற்கும் இந்த உலகமே சாட்சியம். இஸ்ரேல் இந்த இன அழிப்பிற்கு எதிராகவே ஹமாஸ், ஹிஸ்புல்லா உள்ளிட்ட



அமைப்புகள் உருவாகின.

ஹமாஸ் அமைப்பின் 'ஒக்ரோபர் 7 ' தாக்குதலுக்கு பதிலடி என்கிற பெயரில் இஸ்ரேல் ஒரு ஆண்டு முழுவதுமே தன் எல்லைகளை மீறிய வண்ணம் இருக்கிறது. ஹமாஸை அழிப்பது எங்கள் நோக்கம் என்று கூறி களத்தில் இறங்கிய அவர்கள் இன்று வரை காசாவில் இருந்து ஹமாசை வெளியேற்ற முடியவும் இல்லை, ஹமாஸ் வசம் பணயக்கைதிகளாக உள்ள இஸ்ரேலியர்களை மீட்கவும் முடியவில்லை, இந்தத் தோல்வியை மறைக்க அவர்கள் வேறு பக்கங்களில் தாக்குதல்களை தொடுத்ததன் வழியே இந்தப் போரை இன்னும் விரிவாக்கியுள்ளார்கள்.

ஏப்ரல் 1, 2024 அன்று சிரியாவின் டமாஸ்கசில் உள்ள ஈரான் தூதரகத்தை தரைமட்டமாக்கினார்கள், அங்கிருந்த ஈரான் ராணுவ அதிகாரி முகமத் ரேசா சாகேதியை கொன்றார்கள், இந்த தாக்குதல் முதலே இஸ்ரேல் ஈரானைக் குறிவைக்க தொடங்கிவிட்டது என்கிற நோக்கம் புலப்பட்டது. இதற்கு பதிலடியாக ஈராக்கில் உள்ள குர்திஸ்தானில் இருக்கும் மொசாட் தளத்தை தாக்கி பதிலடி கொடுத்தது அத்துடன் நில்லாமல் ஏப்ரல் 14,2024 அன்று 300 ட்ரோன்களை ஈரான் இஸ்ரேல் தலைநகரம் டெல் அவிவ் நோக்கி அனுப்பி தனது வலிமையை உலகிற்கு காட்டியது. இந்தத் தாக்குதல் மென்மையானதாக இருப்பினும் ஈரான் தயார் நிலையில் தான் உள்ளது என்பதை இஸ்ரேலுக்கு உணர்த்தவே இது நிகழ்த்தப்பட்டது.

மே மாதம் ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைய்ஸி ஹெலிகொப்டர் விபத்தில் காலமானார், இதுவும் இஸ்ரேலின் கைங்கரியமாக இருக்குமோ என்கிற பேச்சு உலகம் முழுவதும் நடைபெற்ற போதும் நேரடிச் சாட்சியங்கள் இல்லாததால், ஈரான் பொறுமை காத்தது. ஜூலை மாதம் ஈரானில் தேர்தல் நடைபெற்று அங்கே ஜனாதிபதியாக மசௌட் பேசேஷ்கியான் பதவியேற்றார். இந்த பதவியேற்பில் கலந்து கொள்ள அங்கே வந்த ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹானியே பெரும் தாக்குதலில் கொலை செய்யப்பட்டார். அடுத்த நாளே ஹிஸ்புல்லாவின் படைத் தளபதிகளில் ஒருவரான பவுத் சுக்ர் லெபனனின் பெய்ருட்டி இஸ்ரேலின் தாக்குதலில் கொலை செய்யப்பட்டார். உடன் பதிலடியாக ஹிஸ்புல்லா அமைப்பு நூற்றுக்கணக்கான ரொக்கெற்றுகளை இஸ்ரேலின் வடக்கு பகுதியில் ஏவியது.

ஒக்ரோபர் 7, 2023க்கு பிறகு அதிகாரப்பூர்வமாக 48,000 பேரை இஸ்ரேல் படைகள் கொன்று குவித்துள்ளன, அவர்களின் இன அழிப்பும் ரத்த வெறியும் இன்னும் அடங்கவில்லை. சில வாரங்கள் முன்பு ஹிஸ்புல்லா அமைப்பில் பேஜர்களும் வாக்கி டோக்கி கருவிகளும் வெடித்து பெரும் அழிவை அந்த அமைப்பு சந்தித்தது. இஸ்ரேல் லெபனன் மீது வான் வழி தாக்குதலை தொடங்கியது. லெபனன் தலைநகரம் பெய்ருட்டி மீது கடும் தாக்குதல்கள் நடைபெற்றன, ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டார். இஸ்ரேல் லெபனனுக்குள் தரை வழியாக நுழைந்தது. ஆனால் அவர்களால் பெரிதாக முன்னகர்ந்து செல்ல இயலவில்லை.

ஈரானின் பொறுமையை இஸ்ரேல் தொடர்ந்து சோதிக்க, ஒக்ரோபர் 1 இரவு ஈரான் 200 ஏவுகணைகளை இஸ்ரேல் தலைநகரம் டெல் அவிவ் நோக்கி அனுப்பியது. மொத்த உலகமும் இந்தத் தாக்குதலில் உறைந்து போனது. இஸ்ரேலில் உள்ள மொசாட் தலைமையகம் மற்றும் நெவாடிம் விமானப்படைத் தளம் ஆகியவைகளை இலக்குகள் என்று ஈரான் அறிவித்தது. "இஸ்ரேல் பொதுமக்களைக் கொல்லும் நோக்கம் எங்களுக்கில்லை சர்வதேச போர் நடைமுறைகளுக்கு இனங்கவே நாங்கள் ராணுவத் தளவாடங்களை அழிக்க இந்த ஏவுகணைகளைச் செலுத்தினோம் 'என்றது ஈரான். 'இத்துடன் நிறுத்திக் கொள்வோம் ஆனால் இதனைத் தாண்டி நீங்கள் மீண்டும் தாக்குவீர்கள் என்றால் நாங்கள் முழுமையான போருக்கும் தயாராகவே இருக்கிறோம்' என்றது ஈரான்.

இஸ்ரேல் தொடர்ந்து இத்தனை பெரும் வன்மத்துடன் இயங்குவதற்கும், இத்தனை நாடுகளில் தாக்குதல்கள் நடத்துவதற்கும் மூல காரணமாக இருப்பது அவர்களுக்கு அமெரிக்காவிடம் இருந்து கிடைக்கும் நிதியும் ஆயுதங்களுமே. அமெரிக்கா தலையிட்டாலேயொழிய இஸ்ரேலை அடக்கவும் இயலாது, ஒரு உலகப் போர் உருவாவதைத் தடுக்கவும் முடியாது. இஸ்ரேல் பொறுப்பற்று இயங்குகிறது என்பதை உலகமே அறியும். ஆனால் அமெரிக்கா இத்தனை பொறுப்பற்று இருப்பது வரலாற்று பிழை. அமெரிக்கா தனது வரலாற்று பாத்திரத்தை வகிக்குமா அல்லது மீண்டும் தவறுகள் செய்யுமா என்பதற்கு காலம் தான் பதிலளிக்கும்.





# விரைவில்! மாவை நித்தியின் சிலப்பதிகாரம் அரியதோர் அரங்க அனுபவம்!

சிலப்பதிகாரம் - தமிழின் முதன்மைக் காப்பியம். தமிழர்களின் இழக்கமுடியாத அருஞ் சொத்து. 1800 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்” என்று பாதியாரால் போற்றப் பட்டது.

இத்தகைய பெருமை வாய்ந்த சிலப்பதிகாரம், பிரமாண்டமானதோர் தயாரிப்பாக விரைவில் மெல்பேர்ன் அரங்குக்கு வருகிறது! கேட்கத் தெவிட்டாத கூத்துப் பாடல்களுடன், அழகிய பாரம்பரிய ஆட்டமும் சேர்ந்த இக் கலைப் படைப்பு, வயது வேறுபாடின்றி எல்லோரையும் கவர வல்லது.

இளங்கோவடிகள் இயற்றிய “சிலப்பதிகாரம்”, காதல், கவர்ச்சி, புறக்கணிப்பு, அநீதி, அதிகாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய அற்புதமானதோர் நாடக இலக்கியம். மூலத்தின் சுவை குன்றாமல் அதனை அப்படியே பின்பற்றி, எல்லோருக்கும் விளங்கும் எளிய தமிழில் அரங்கேறுகிறது இந்நாடகம்.

தலைசிறந்த பாடகர்களும், வாத்தியக் கலைஞர்களும் இணைந்து வழங்கும் இனிய இசை.

சிறந்த நடிப்பு.

மாவை நித்தியின் ஆழமும், சுவையும் மிக்க எழுத்துரு.

பகீரதி - மாவை நித்தி நெறியாள்கை.

இதுவரையில் காணாத, வாழ்க்கையில் என்றும் மறக்கமுடியாத, புதிய அரங்க அனுபவமாக இது அமையும்!

முப்பது நடிகர்கள் - தொடர்ச்சியாக வரும் பாடல்கள் - ஆட்டங்கள் - மூன்றேகால் மணி நேரம் (இடைவேளை உட்பட) மெய்மறந்து ரசிக்கலாம்.

நுழைவுச் சீட்டுகளுக்கு: https://drumticketing.greater-dandenong.vic.gov.au/9975

மேலதிக விபரங்களுக்கு: 0417 139 629 info@bharathi.org.au www.bharathi.org.au






# வாரிசு அரசியல் வரமா சாபமா ?

● ஆனைமுத்து சுப்பிரமணியன்

கருணாநிதியின் பேரன் என்பதால், ஸ்டாலினின் மகன் என்பதால் உதயநிதி தமிழ்நாட்டில் துணை முதல்வராகப் பதவியேற்றார் என்கிற ஒரு குரல் இங்கே கடந்த வாரம் மிக தீவிரமாக ஒலித்தது. இது இப்பொழுது ஏதோ முதல் முறையாக ஒலிக்கவில்லை மாறாக அவருக்கு அமைச்சராக பதவி வழங்கப்போகிறார்கள் என்றும், அவருக்கு துணை முதல்வர் பதவி வழங்கப் போகிறார்கள் என்றும் வதந்திகள் சமூக ஊடகங்களில் உலவிய நேரத்திலும் இதே குரல்கள் முணுமுணுக்கவே செய்தன.

2006இல் முரசொலியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற உதயநிதி, 2008ஆம் ஆண்டு ரெட் ஜெயண்ட் என்கிற சினிமா தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கினார். 2012 இல் அவர் கதாநாயகனாக நடித்த ஒரு கல் ஒரு கண்ணாடி திரைப்படம் வெளிவந்தது, இந்தத் திரைப்படம் பெரும் வெற்றி பெற்றதால் தமிழநாட்டின் மக்கள் மத்தியில் புழுங்கும் பெயராக மாறினார் உதயநிதி. இதனைத் தொடர்ந்து 15 திரைப்படங்களில் கதாநாயகனாக நடித்தார்.

2016 சட்டமன்றத் தேர்தலில் ஸ்டாலின் நின்ற கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டார். அதே காலகட்டத்தில் திமுக மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களில் பங்கேற்றார். நேரடி கட்சி அரசியலில் ஈடுபட்டார். 2018ல் கலைஞர் கருணாநிதியின் இறப்பின் பின்னர் திமுக இளைஞரணியின் செயலாளராக பதவியேற்றார். 2019 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முழுவதுமே பிரசாரத்தில் ஈடுபட்டார். மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை, ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டு நீண்ட நாட்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டும் வகையில் ஒற்றைச் செங்கல்லை தூக்கி காட்டி பிரசாரம் செய்ததன் வழியே தமிழ்நாட்டு ஊடகங்களில் பெரும் கவனத்தைப் பெற்றார். இந்திய நாடாளுமன்றம் வரை இந்த செங்கல் ஒரு கருவியாக மாறியது.

2021 சட்டமன்றத் தேர்தலில் சென்னை சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்றார். 2022ல் தமிழ்நாட்டு அமைச்சரவையில் பங்கேற்றார். 2023ல் சனாதனம் குறித்து ஆற்றிய உரை அவரை இந்திய அளவில் பிரபலமாக மாற்றியது, உதயநிதி மீது இந்தியா முழுவதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்திய அளவில் ஒரே சமயத்தில் புகழையு, கடுமையான விமர்சனத்தையும் எதிர்கொண்டார். 2024 செப்ரெம்பர் மாதம் அவருக்கு தமிழ்நாட்டின் துணை முதல்வர் பதவி வழங்கப்பட்டது. கருணாநிதியின் பேரன் என்பதால், ஸ்டாலினின் மகன் என்பதால் உதயநிதி தமிழ்நாட்டில் துணை முதல்வராகப் பதவி வழங்கப்பட்டது, அய்யோ எல்லாம் போச்சே, இப்படி இந்தியாவில் நிகழ்ந்ததேயில்லையே என்கிற ஒப்பாரி குரல்கள் நம் காதில் விழவே செய்கிறது, இந்த குரல்களின் உண்மை இருக்கிறதா என்று கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம்.

தமிழ்நாட்டில் தான் வாரிசு அரசியல் நடைபெறுகிறது என்கிற பாஜகவின் குரல் மிகவும் போலியானது. நீங்கள் கூட்டணி வைத்துள்ளீர்களே அந்த பாமகவின் அன்புமணி ராமதாஸ் யார்? என்று சங்கிகளிடம் கேட்டால் அவர்களிடம் இருந்து பதில் ஏதும் வராது. இது ஏதோ அன்புமணி அல்லது துரை வைகோ பற்றிய பார்வை மட்டும் அல்ல. இன்னும் கொஞ்சம் அவர்களின் பழைய பல்லவியை நீங்கள் கேட்டால் நேரு குடும்பம், இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, ராகுல் காந்தி என்பார்கள்.

இந்தியா முழுமையையும் நீங்கள் ஒரு சுற்று சுற்றி வந்தால் முலாயம் சிங் யாதவுக்கு பிறகு அகிலேஷ் யாதவ், உத்தவ் தாக்ரேவுக்கு பிறகு ஆதித்யா தாக்ரே, முப்தி முய்கமத் சயீத்துக்கு பிறகு மகபூபா முப்திக்கு, பரூக் அப்துல்லாவுக்கு பிறகு ஒமர் அப்துல்லா அதே நேரம் வங்கத்தில் மம்தாவுக்கு பிறகு அபிஷேக் பானர்ஜி என்கிற ஒரு போக்கை நீங்கள் காணலாம். அதே நேரத்தில் பாஜகவின் தலைவர்கள் சொல்வது போல் இவை எல்லாம் இந்தியாவின் எதிர்க்கட்சிகளில் மட்டுமே நடைபெறுகிறது, பாஜக என்கிற கட்சி ஒரு புனிதமான கட்சி என்றால் அந்த புனிதத்தில் உள்ள மாட்டு கொழுப்பை வெளிப்படுத்திச் சொல்வதும் நம்முடைய கடமை தானே.

பரிக்கர், பட்நவிஸ், மொன்சரேட்டா, பாட்டில், மகாஜன், முண்டே, ரானே, தோமர், சிந்தியா, பாஸ்வான், சிண்டே என்று பாஜக கட்சியின் அமைச்சரவைகளில் இடம் பெற்றுள்ள அத்தனை பெயர்களின் பின்னாலும் ஒட்டியிருப்பவை சாதியின் பெயர்கள் மட்டும் அல்ல இவை எல்லாம் அந்த கட்சியில் உள்ள வாரிசு அரசியலில் பெயர்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக போட்டியிட்ட 395 தொகுதிகளில் 30% பேர் வாரிசுகள் என்றும் அவர்களின் முக்கியமான அமைச்சரவைகளில் இடம் பெற்றுள்ள பலர் வாரிசு அரசியலின் வழியே அதிரடியாக பொறுப்புகள் வழங்கப்பட்டவர்கள் என்பதையும் நீங்கள் உற்றுப் பார்க்க வேண்டும்.

திமுகவில் பல சீனியர் அமைச்சர்கள் இருக்க, இந்த மூத்தவர்களை மதிக்காமல் இப்படி கட்சி துணை முதல்வர் பதவியை உதயநிதிக்கு வழங்கவிட்டதே என்று கதறும் பாஜக காரர்களிடம் பாஜகவின் மூத்த தலைவர்களாக வாஜ்பேயி, அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, ஜஸ்வந்த் சிங், அருண் ஜெட்லி, சுஷ்மா சுவராஜ் என அனைவரையும் தூக்கி வீசிவிட்டு மோடி எப்படி பதவிக்கு வந்தார் என்று கேட்டால் பதில் வராது, இந்தத் தலைவர்களில் பலர் கொடூரமான தனிமையில் மதிப்பற்று உயிரிழந்தார்கள், இவர்களில் பலரை மோடி புகைப்படங்கள் எடுக்க மட்டுமே அவர்களின் தள்ளாத வயதில் பயன்படுத்தினார், அதே நேரத்தில் 70 வயதுக்கு மேல் உள்ளவர்கள் பதவியில் இருக்க கூடாது என்ற மோடி தன்னுடைய 70 வயதுக்கு மேல் பதவியை வேறு ஒருவருக்கு விட்டுக்கொடுத்து விடுவாரா என்றால் பதில்கள் ஏதுவும் இல்லாது பாஜக காரர்கள் தொடர்பு எல்லைக்கு வெளியே சென்று விடுவார்கள்.

உதயநிதி சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்வு செய்யப்பட்டவர், ஆனால் நிர்மலா சீத்தாராமன், ஜெயசங்கர் ஆகியோர் பாஜகவின் ஆட்சியில் மத்திய கபினெட் அமைச்சர்களாக பொறுப்பு வகிக்கிறார்களே, இவர்கள் கட்சியில் வேலை செய்தவர்களா, இவர்கள் மக்களால் எங்காவது இந்தியாவின் ஒரு வார்ட் தேர்தலிலாவது போட்டியிட்டு வென்றுள்ளார்களா, பாஜகவின் போராட்டங்கள் எதிலாவது பங்கேற்றிருக்கிறார்களா, சிறை சென்றிருக்கிறார்களா என்று வினா எழுப்பினால் நம்முடன் தொடர்பை துண்டித்துக் கொள்வார்கள்.



உலகம் முழுவதுமே குடும்ப அரசியல் என்கிற போக்கு உள்ளது, அமெரிக்க ஜனாதிபதிகளின் பட்டியல் வரை நீங்கள் குடும்ப அரசியல் போக்குகளை பார்க்கலாம். உலகில் ஆசியா, சகாரா, தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் இவை கூடுதலாக உள்ளது என்பதை நாம் பார்க்கலாம். நிலப்பிரபுத்துவம் எங்கெல்லாம் இருந்ததோ, இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த வாரிசு அரசியலில் கேடு இருக்கவே செய்கிறது. தங்களின் குழந்தைகளுக்கு சொத்தை அப்படியே கொடுக்கும் பழக்கம் உள்ள இடங்களில் அது அதிகமாகவே இருக்கிறது, ஆனால் மேற்கத்திய நாடுகளில் இந்த போக்கு குறைவாக உள்ளதைக் காண முடிகிறது, அங்கே குழந்தைகள் தாங்களாகவே தங்களின் கல்லூரி படிப்பிற்கு கடன் வாங்கி படித்து தங்களின் வாழ்வை நிர்னயித்துக் கொள்ளும் பழக்கம் உள்ளது, அப்படியான இடங்களில் இந்த வாரிசு போக்குகள் குறைவாக உள்ளது என்பதையும் நாம் காண வேண்டும்.

ஜனநாயகத்தில் வாரிசு அரசியல் ஒரு கேடுதான், அரசியல் என்பது ஒரு அறிவு சார் செயல்பாடு, ஒருவர் தன்னை அதற்கு பல பத்து ஆண்டுகள் தயார் செய்து கொள்ள வேண்டும், சமூகத்தை பற்றி, பொருளாதாரத்தை பற்றி, உலக போக்குகளை பற்றிய தீவிர அறிதல் கோரும் ஒரு துறை இது, மக்களின் மீது அடிப்படையில் ஒரு மரியாதையும் அவர்களின் வாழ்வை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துகின்ற ஒரு பண்பும் வேண்டும். உதயநிதியிடம் என்ன பண்பு உள்ளது என்பதை இன்னும் கூர்மையுடன் அவதானிப்போம். ■

# அகம், புறம், சங்க(ம)ம்

## இன்னாது உற்ற அறன் இல் கூற்றே

சமீபத்தில் கவிஞர் இசை அவர்களுக்கு நாஞ்சில் நாடன் விருது வழங்கப்பட்ட விழாவில், எழுத்தாளர் பி.ஏ.கிருஷ்ணன் கலந்துகொண்டு பேசினார். அப்பொழுது நல்ல கவிதை என்பது என்ன என்பதையும் ,அதற்கு உதாரணமாக தமிழிலுள்ள சில நல்ல கவிதைகளை வாசித்து, அதன் சொல், பொருள் அழகையெல்லாம் மிக அழகாக பேசியிருந்தார். அப்பொழுது அவர் புறநானுற்றில் வரும் இந்த பாடலை வாசித்து , எவ்வளவு எளிதாக மிக குறுகிய சொற்களில் எவ்வளவு பெரிய விஷயத்தை எடுத்து சொல்லியிருக்கின்றனர் என்று சிலாகித்து பேசினார். அந்த பாடல் பின்வருமாறு-

*'ஐயோ!' எனின், யான் புலி அஞ்சுவலே*
*அணைத்தனன் கொளினே, அகல் மார்பு எடுக்கவல்லேன்*
*என் போல் பெரு விதிர்ப்புறுக, நின்னை*
*இன்னாது உற்ற அறன் இல் கூற்றே!*
*நிரை வளை முன் கை பற்றி*
*வரை நிழல் சேர்கம் நடத்திசின் சிறிதே!*

**திணை:** பொதுவியல். எல்லாத் திணைகளுக்கும் பொதுவான விடயங்களை பற்றிய பாடல்கள் இந்த திணையில் வருவன.

துறை: பெரும்பிரிவு என்பதை இது குறிக்கிறது. கணவனை நிரந்தமாகப் பிரியும் நிலையைக் கூறுவது முதுபாலைத் துறை.

புறநானூறு, 255.

**பாடியவர்:** வன்பரணர்.

**அருஞ்சொற்பொருள்:**

விதிர்ப்பு = நடுக்கம் ,நிரை = வரிசை, இன்னாது = கொடுமை, கூற்று = எமன், வரை = மலை

**பொருள்:-**

"ஐயோ!' என்று கதறி அழுதால் உன்னை தாக்கிய புலி மறுபடியும் திரும்பி வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். (இங்கே புலி என்பது காட்டில் வாழும் மிருகத்தை குறிக்கலாம். இல்லையென்றால் புலி என்பது சோழ வீரர் களை குறிக்கலாம்). காயம் பட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் உன்னை இங்கிருந்து அணைத்துக்கொண்டு செல்லலாம் என்றால் உன் அகன்ற மார்புடைய உடலை என்னால் தூக்க முடியவில்லை. உன்னை இவ்வாறு கொஞ்சம் கூட அறமற்ற முறையில் கொன்ற காலன் (எமன் அல்லது பகைவன்) எவ்வாறு நான் பயத்தில் நடுக்கம் கொள்கிறேனோ அதே போன்று அவனும் பெரிய நடுக்கமுறுவானாகுக. அன்பே ! என்னுடைய வளையல் அணிந்த முன்கையை (வளையல்களை உடைக்கவில்லை .இன்னும் தலைவன் உயிருடன் வாழ்வான் என்ற நம்பிக்கை அவளுக்கு இருக்கிறது) பற்றிக்கொண்டு மெல்ல நடந்தாயென்றால் , நாமிருவரும் மலையின் நிழலுக்குச் சென்று பகைவர்களின் கண்களிலிருந்து தப்பித்து சென்று விடலாம் ."



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

இந்த பாடலை நாம் உற்று நோக்கினால் எப்படி எளிதாக ஒரு பெண்ணின் துயரத்தை நமக்கு கடத்துகிறார். முதல் வரியிலேயே நமக்கு தலைவன் அடிபட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறான் என்பதையும் தலைவி கையறு நிலையில் தவிக்கிறாள் என்பதையும் வன்பரணர் சொல்லிவிடுகிறார். தலைவன் எவ்வளவு பெரிய வீரன் (எவ்வளவு அகன்ற மார்பு படைத்தவன்), அவனை தனியாக தலைவியால் கொண்டுசெல்ல முடியாது என்பதை அடுத்த வரிகளில் சொல்லிவிடுகிறார் . இந்த மூன்றாவது வரி தமிழில் எழுதப்பட்ட மிக நல்ல கவிதை என்று சொல்ல முடியும் தலைவனை இழந்து நான் எவ்வாறு தவிக்கிறேனோ, அதே போன்று அறமற்ற முறையில் துணையினை இழந்து நீயும் நடுக்கமுற வேண்டும் என்று சாபமிடுகிறாள். தலைவியின் கையறு நிலையினை ஒரே வரியில் சொல்லும் கவிதை வரிகள். கடைசி வரியில் தலைவி எனது வளையல்கள் அணிந்த முன்கையைப் பற்றிக்கொண்டு என்னோடு நடந்து வா ,நாம் மலையின் நிழலிற்கு சென்று விடலாம் என்பதோடு கவிதை முடிகிறது. இந்த கடைசி வரியில் வன்பரணர் என்ன சொல்ல வருகிறார். அத்துணை துயரத்திற்குப் பிறகும் தலைவி நம்பிக்கை இழக்கவில்லை. தலைவன் உயிர் பிழைத்துவிடுவான் என்று நம்பிக்கை கொள்கிறாள். இதுநாள் வரை உன்கை பற்றி நான் நடந்தேன். இப்பொழுதாவது என் கை பற்றி நடந்து வருவாயா ? . அதாவது இப்பொழுதாவது என் சொல் கேட்பாயா என்று கவலையில் வெடித்து அழுகிறாள் தலைவி.






# லேபர் கட்சியுடன் அரசியல் போருக்கு தயாராகும் செனட்டர் பாத்திமா பேமன்

லேபர் கட்சியிலிருந்து வெளியேறிய சுயாதீன செனட்டர் பாத்திமா பேமன், அக்கட்சியுடன் அரசியல் சமரில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்.

லேபர் கட்சியிலிருந்து வெளியேறி சிறிது காலம் மௌனம் காத்த அவர், தற்போது புதியதொரு அரசியல் கட்சியை ஆரம்பிக்கும் அறிவிப்பை விடுத்துள்ளார்.

2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கூட்டாட்சி நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்தே அவர் புதிய கட்சியை பதிவுசெய்வதற்குரிய நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

இதனால் கடுப்பாகியுள்ள லேபர் கட்சியின் தலைவர் அன்ரனி அல்பானீஸி, கட்சி துவங்குவதற்கு முன் செனட்டர் பதவியை துறக்குமாறு பாத்திமா பேமனை வலியுறுத்தியுள்ளார்.

எனினும், பிரதமரின் கருத்தை அவர் ஏற்க மறுத்துள்ளார். அடுத்த தேர்தலில் இதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்ற தொனியில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்ககோரிய கிறீன்ஸ் கட்சியின் தீர்மானத்தை லேபர் கட்சி கடுமையாக





எதிர்த்திருந்தது. எனினும், இது விடயத்தில் கட்சி முடிவுக்கு கட்டுப்படாமல் மேற்படி பிரேரணைக்கு செனட்டர் பாத்திமா பேமன் ஆதரவளித்திருந்தார்.

இதனையடுத்து அவருக்கு எதிராக லேபர் கட்சி நடவடிக்கை எடுத்தது. கட்சியின் குழுக் கூட்டங்களில் பங்கேற்பதற்கு தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில் லேபர் கட்சியில் இருந்து அவர் வெளியேறினார். தற்போது சுயாதீன செனட்டராக செயற்பட்டுவருகின்றார்.

பாத்திமா பேமன் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் ஹிஜாப் அணிந்த முதல் முஸ்லிம் பெண் செனட்டராக 2022 ஜூனில் உலக அகதிகள் தினத்தன்று பதவியேற்றிருந்தார். கடந்த தேர்தலில் மேற்கு ஆஸ்திரேலிய செனட் இடத்தை அவர் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு அகதியாக வந்தவரின் மகள்தான் செனட்டர் பாத்திமா பேமன். ஆஸ்திரேலியாவில் சமையல் வேலை செய்து, பாதுகாப்பு ஊழியராக, டெக்ஸி சாரதியாக பணியாற்றியே செனட்டரின் தந்தை அவரின் குடும்பத்தை கவனித்து வந்துள்ளார்.

மேற்கு ஆஸ்திரேலியாவில் பட்டப்படிப்பை முடித்த பாத்திமா பேமன, தன்னார்வ சேவைகளில் ஈடுபட்டுவந்துள்ளார். சமூக நீதி, சமத்துவம் உள்ளிட்டவற்றுக்காகவும் குரல் எழுப்பி வந்துள்ளார். அதன்பின்னரே அரசியல் பயணம் ஆரம்பமானது.

அவர் புதிய கட்சி ஆரம்பிக்கவுள்ளமையானது லேபர் கட்சிக்குரிய முஸ்லிம் வாக்குகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## இனவாதப் பிடிக்குள் பூர்வக்குடி சிறார்கள்

Northern territory இல் 80 சதவீதமான பூர்வக்குடி சிறார்கள் மற்றும் இளைஞர்கள் இனவாதத்தை எதிர்கொண்டு வருகின்றனர் என்று புதிய ஆய்வறிக்கையொன்றில் தெரியவந்துள்ளது.

Northern territory இன் சிறார் ஆணையாளரின் அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

8 முதல் 19 வயதுக்குட்பட்ட 284 பேரிடம் இது தொடர்பில் வினவப்பட்டுள்ளது. இதில் 31 சதவீதமானோர், தாம் பாடசாலை சூழலில் இனவெறியை எதிர்கொள்வதாக கூறியுள்ளனர்.

மேலும் 29 பேர் பொது அமைப்புகளின் இன பாகுபாட்டை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், சில சமூக ஊடகங்களும் இனவெறியின் ஒரு பகுதியாக மாறியுள்ளது என கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இனவெறியை எதிர்த்துப் போராடுவதில் சிறந்த கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முன்முயற்சிகள் முக்கியமானவை என்று அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

"குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பற்றிய எதிர்மறையான, அச்சுறுத்தும் மற்றும் பாரபட்சமான சமூகக் கதைகள்" மாற்றப்பட வேண்டும் என்றும குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் குரல்களைக் கேட்கும் முறையான சீர்திருத்தம் அவசரமாகத் தேவை எனவும் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இனவாதத்திற்கு தீர்வு காணும் பொறுப்பை இளைஞர்கள் தாங்களாகவே சுமக்கக் கூடாது எனவும், இனவாதத்தைத் தடுக்கும் கடமை அனைவருக்கும் உள்ளது எனவும் சிறார்கள் தொடர்பான ஆணைக்குழுவின் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பூர்வக்குடி சிறார் விவகாரம் தொடர்பில் புதிய தேசிய ஆணைக்குழு

Northern Territory பூர்வக்குடி சிறார் விவகாரம் தொடர்பில் புதிய தேசிய ஆணைக்குழுவொன்று நிறுவப்படவுள்ளது.

சிறார் பராமரிப்பு நிலையம் மற்றும் சிறார் தடுப்பு மையம் என்பவற்றில் பூர்வக்குடி சிறார்கள் நடத்தப்படும் விதம் பற்றி இந்த ஆணைக்குழு கண்காணிக்கவுள்ளது.

குறித்த ஆணைக்குழு ஜனவரி முதல் செயற்பட ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பூர்வக்குடி சிறார்கள் மற்றும் இளைஞர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் இக்குழுவின் தலைமைப்பதவிக்கு பூர்வக்குடி நபரொருவர் நியமிக்கப்படவுள்ளார் என தெரியவருகின்றது.

ஆஸ்திரேலியாவில் சிறார் பராமரிப்பு மற்றும் இளைஞர் தடுப்பு மையங்களில் உள்ள பூர்வக்குடி சிறார்கள் மற்றும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரட்டைக் கொலை சூத்திரதாரி 47 வருடங்களுக்கு பிறகு கைது





இற்றைக்கு 47 வருடங்களுக்கு முன்னர் மெல்பேர்ணில் இரு பெண்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இத்தாலியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

28 வயதான Suzanne Armstrong மற்றும் 27 வயதான Susan Bartlett, ஆகியோர் 1977 ஜனவரி மாதம் தமது வீட்டில் சடலங்களாக மீட்கப்பட்டிருந்தனர். அவர்களின் உடலில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன.

Susan Bartlett இன் 16 மாதங்களேயான மகன் எவ்வித காயமும் இன்றி மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் பல வருடங்களாக விசாரணைகள் இடம்பெற்றுவந்தன.

இந்நிலையிலேயே இத்தாலி, ரோம் விமான நிலையத்தில் 65 வயது முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியா மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகளில் இரட்டைக் குடியுரிமை பெற்ற நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நாட்டுக்கு கொண்டுவருவதற்குரிய முயற்சியில் விக்டோரிய பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு: ஆஸி.பெண் துருக்கியில் கைது!

பயங்கரவாத அமைப்பில் அங்கம் வகித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஆஸ்திரேலிய பெண்ணொருவர் துருக்கியில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

Cigdem Aslan என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் பிரிவினைவாதக் குழுவின் ஆஸ்திரேலிய பிரிவில் இவர் செயற்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

துருக்கியின் தேசிய புலனாய்வு பிரிவு மற்றும் இஸ்தான்புல் பொலிஸின் பயங்கரவாத எதிர்ப்பு பிரிவு ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பிரகாரமே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உளவுத்துறை அதிகாரிகள் அவரை தொடர்ச்சியாக கண்காணித்துவந்துள்ளனர், இந்நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு வருவதற்கு தயாரானவேளையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென்கிழக்கு துருக்கியில் PKK எனப்படும் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி, தன்னாட்சி மாநிலத்துக்காக போராடுகின்றது.

துருக்கியிலும், ஆஸ்திரேலியாவிலும் இந்த அமைப்பு பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தப்பட்டுள்ளது.

# மாதர ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முழுவதும் நன்மை நடக்கக் கூடிய மாதமாகத் தான் இருக்கும். வேலையில் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். வியாபாரம் மேலோங் கும். சின்னச் சின்ன வியாபாரிகளுக்கு கூட இந்த மாதம் பெரியளவில் வரு மானம் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் இருக்கும். வெள்ளிக் கிழமை தோறும் பக்கத்தில் இருக் கும் பெருமாள் கோவிலுக்கு சென்று வழிபாடு செய்வது நன்மை தரும்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முழுவதும் வேலைச் சுமை கொஞ்சம் அதிகமாகத்தான் இருக் கும். ஒரு வேலையை முடித்தால் அடுத்த வேலை பின்னால் காத்தி ருந்து, உங்கள் வீட்டு வாசல் கதவைத் தட்டும். இப்படி நிறையப் பொறுப்புகள் உங்கள் தலை மீது வந்து விழும். இதனால் வீட்டில் இருப்பவர்களோடு நேரத்தைச் செலவு செய்ய முடியாது. வியாபாரம், தொழில் விஷயமாக வெளியூர் செல்ல வேண்டிய சூழ் நிலை உண்டாகும். சில பேருக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கக் கூட வாய்ப்பு இருக்கிறது.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முழுவதும் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகமாக இருக்கும். எந்வொரு வேலையைக் கையில் எடுத்தாலும் அதைத் திட்டமிட்டு முடிக்க பாடுபடுவீர்கள். உங்களை முன்னேற விடாமல் தடுக்க எதிரிகள் பிரச்சினை செய்வார்கள். இருந்தா லும் அதையெல்லாம் சமாளிக்கும் தெம்பும் தைரியமும் உங்களிடத்தில் இருக்கும். புதிய வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு மனதிற்கு பிடித்த வேலை கிடைக்கும்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் முழுவதும் ஓட்டம் நிறைந்த மாதமாக இருக்கும். பண்டிகை நாட்கள் என்பதால் வீட்டில் இருக்கும் பெண்களுக்கு ஓய்வு கிடைக்காது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வீடு ,குடும்பம் எல்லாவற்றையும் கவனிக்க நேரம் இருக்காது. இந்த மாதம் லேசான அலைச்சல் இருக் கும். ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். உறவு களோடு பிரச்சினை வந்தால் வாக்கு வாதம் செய்ய வேண்டாம். ஞாயிற்றுக் கிழமை தோறும் வராகியம்மன் வழிபாடு செய்வது நன்மை தரும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பொறுமை அவசியம் தேவை. எந்த ஒரு முடிவையும் அவசரப்பட்டு எடுக்கக் கூடாது. இருக்கும் வேலையை தக்க வைத்துக் கொள்ளப் பார்க்க வேண்டும். எதிரிகளால் சூழ்ச்சி நடக்கும். வேலையை விட்டு உங் களை நீக்குவதற்கு நிறைய வேலை களை உங்களுடன் இருந்தே செய்வார் கள். அதை எல்லாம் கடந்து செல்லக் கூடிய பொறுமை உங்களுக்கு தேவை. இந்த மாதம் கொஞ்சம் முள் ளின் மேல் நடப்பது போல தான் சூழ்நிலைகள் இருக்கும். அனு சரித்துச் செல்லுங்கள்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சிக்கல்களில் இருந்து விடுபடக் கூடிய மாதமாக இருக்கும். நீண்ட நாட்களாக உங்களைத் தொடர்ந்து வந்த பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பீர்கள். வேலையில் நிம்மதி அடைவீர்கள். எதிரிகளின் பிரச்சினை நீங்கும். ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். திருமணமாகாதவர்களுக்கு திருமண வரன் தேடி வரும். நிறையப் பிரச்சினை களில் இருந்து விடுபட்டு பெருமூச்சு விடக் கூடிய காலம் இது. சந்தோஷ மாக இந்த மாதத்தைக் கடந்து செல்லலாம்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் எதிர்பார்த்த நன்மை எல்லாம் ஒவ்வொன்றாக நடக்கத் தொடங்கும். வியாபாரத்தில் படிப்படியாக முன் னேற்றம் அடைவீர்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்களுடைய வியாபாரத்தை விரிவுபடுத்திக் கொடுக்கும். கடன் பிரச்சினையை எல்லாம் ஒரு முடிவுக்கு கொண்டு வர, நிதி நிலைமை சீர்படும். வரு மானம் பெருகும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சந்தோஷம் குடும்பத்தில் இரட்டிப்பாகும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசி காரர்களுக்கு இந்த மாதம் முழுவதும் கொஞ்சம் ஏற்ற இறக்கங்கள் நிறைந்த மாதமாக இருக்கும். வாரத்தின் தொடக்கத்தில் ஒரு சில பிரச்சினைகள் வந்து போகும். வேலையில் கவனம் செலுத்த முடி யாத சூழ்நிலை இருக்கும். இருந்த போதிலும் விடாமுயற்சியைக் கைவிடக் கூடாது. தொடர்ந்து வேலை செய்து வரும் போது இந்த மாத இறுதியில் உங்களுடைய உழைப்புக்கான தக்க ஊதியம் கிடைக்கும். ஆகவே சோம் பேறித்தனத்தோடு இருக்காதீர் கள்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சந்தோஷம் நிறைந்த மாதமாக இருக்கப் போகின்றது. கவலைகள் எல்லாம் மறக்கப் போகிறது. நீண்ட நாட்களாக பிரிந்த உறவுகளோடு நண்பர்களோடு ஒன்று சேர வாய்ப்பு இருக்கிறது. கணவன் -மனைவிக்குள் இருந்து வந்த சண்டை சச்சரவுகள் ஒரு முடிவுக்கு வரும். வியாபாரத்தில் நீங்கள் இழந்ததை எல்லாம் திரும்பவும் மீட்டெடுப்பீர்கள். மீண்டும் யாருக்கும் புதுசாக வியாபாரத்தில் கடன் கொடுக்காதீர்கள். மூன்றாவது நபரை கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம்.

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் எதிர்பார்ப்பு அதிகமாக இருக் கும். உங்களுடைய முயற்சிகளில் தான் கவனம் இருக்க வேண்டுமே தவிர, எப்போதும் பலனை எதிர் பார்த்துக் கொண்டே இருக்கக் கூடாது. உங்களுடைய கடமைகளைச் சரி யாகச் செய்யுங்கள். கடவுள் பலனை எப்போது கொடுக்க வேண்டுமோ, அப்போது கொடுப்பான். அதை விட்டுவிட்டு அகலக்கால் வைக்கக் கூடாது. எப்போதும் பகல் கனவு காணக்கூடாது. வேலை, தொழில் எல்லாவற்றிலும் கூடுதல் முயற்சி தேவை.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் கொஞ்சம் கூடுதல் பொறுப்பு கள் இருக்கும். வேலையெல்லாம் சிறப்பாகச் சென்றாலும், அதிகப் படியான நேரம் அலுவலகத்திலேயே உங்களுக்குக் கழிந்து விடும். குடும்பத்தை கவனிக்க நேரம் இருக் காது. இதனால் கணவன்- மனைவிக் குள் வாக்குவாதம் வரலாம். குடும் பம், வேலை இரண்டையும் சரிசமமாக இந்த மாதம் நகர்த்திச் செல்வதில் திறமையை வளர்த்துக் கொள்ளுங் கள்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சந்தோஷம் நிறைந்த மாதமாக இருக்கும். எதிலும் ஜெயித்துக் காட்ட வேண்டும் என்றால் கொஞ்சம் கஷ்டத்தை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்லுங்கள். உங்கள் தரப்பு வாதத்தை பொறுமையாக வையுங்கள். எடுத்த உடனேயே முன் கோபப்பட வேண்டாம். குடும்பத்தில் இருக்கும் பெண்கள் பொறுமையாக இருக்க வேண்டும். குடும்பத்தில் விரிசல் வராமல் பார்த்துக் கொள் ளுங்கள்.

# இலக்குகள் என்றும் ஒன்றேதான்!

● சியாமிளா யோகேஸ்வரன்

அவுஸ்திரேலியாவின் வடக்கு மண்டலத்தில் (Northern Territory) இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த தேர்தலில் Country Liberals கட்சி பெருவாரியாக வெற்றி பெற்று புதிய முதல்வராக லியா ஃபினோக்கியாரோ (Lia Finocchiaro) பதவியேற்றிருந்தார். அண்மையில் அவரது தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளில் ஒன்றான சிறுவர்களைக் குற்றவாளிகளாகக் காணுவதற்கான குறைந்தபட்ச வயதை 12 இலிருந்து 10 ஆக மீண்டும் குறைக்கவிருப்பதாக அறிவித்தலை வெளியிட்டுள்ளார். முன்னரும் அமுலில் இருந்த இந்தச் சட்டத்தினால் பூர்விகக் குடிகளே அதிகளவில் பாதிக்கப்படுகின்றார்கள் என அடையாளம் காணப்பட்டிருந்தனர். "Raise The Age" என்ற இயக்கத்தின் செயற்பாட்டின் மூலம் சிறுவர் குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்காக குறைந்த பட்ச வயதை 10 லிருந்து 12 ஆக உயர்த்திய முதல் ஆஸ்திரேலியப் பிராந்தியமாக வடக்கு மண்டலம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அடையாளம் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து மற்றய மாநிலங்களிலும் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததன் மூலம் குற்றமிழைத்த சிறுவர்கள் திருந்துவதற்காக மீள ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டதாகவே கருதப்பட்டது. சில மாநிலங்களில் இந்த வயதெல்லையானது, இப்போது 14 ஆக உயர்த்தப்பட்டிருக்கும் நிலையில், வடக்கு மண்டலமானது பின் நோக்கிச் செல்லும் வகையில் எடுத்திருக்கும் இந்த முடிவு, மனித உரிமை ஆர்வலர்களுக்கும், பழங்குடியினரின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

வடக்கு மண்டலத்தில் கிட்டத்தட்ட 25 சதவீதமானோர் பூர்வ குடிகளாக இருக்கின்றார்கள். அவுஸ்திரேலியாவின் சனத்தொகையில் 10 - 17க்கு இடைப்பட்ட வயதினரில் சுமார் 5.7% வீதமானோர் மட்டுமே பூர்விகக் குடிகள் ஆவார்கள். ஆனால் 2023ஆம் ஆண்டில் ஒவ்வொரு நாளும் சிறையில் இருந்த குழந்தைகளில் 63% சதவீதமானோர் பூர்விகக்குடிகள் என்பது அதிர்ச்சி தரக்கூடிய தரவாகும். இதன் பொருள், அவுஸ்திரேலியாவில் வாழும் சாதாரண சிறுவரைக் காட்டிலும், பூர்வகுடிச் சிறுவருக்கு 29 மடங்கு அதிகமான வாய்ப்பு சிறையில் இருப்பதற்கு உள்ளது. அதிலும் வடக்கு மண்டலத்தில் காவலில் தடுத்து வைக்கப்பட்ட சிறுவர்களில் 97 சதவீதமானோர் பூர்வகுடிச் சிறுவர்களாக இருக்கின்றார்கள் என்ற தகவலும் கவலைக்குரியதே. பூர்வகுடி மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளாது அவர்களை முடக்குவதற்காக ஒரு காலத்தில் திட்டமிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை யாவரும் அறிவார்கள். அதன் ஒரு விளைவாகவே, குடும்பக் கட்டமைப்பும், சமூகக் கட்டமைப்பும் குலைந்துபோன ஒரு சமுதாயமாக இன்று அவர்கள் உருவாகியுள்ளார்கள் என்பதையும், அதன் வெளிப்பாடாகவே சிறுவர் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்ற உண்மையையும் யாராலும் மறுதலிக்க முடியாது.

சமூகத்தில் இளம் சிறார்களால் இழைக்கப்படும் குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதால், மக்கள் அச்சத்துடன் வாழும் நிலையில் உள்ளார்கள். மக்கள் பாதுகாப்பான சூழலில் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும். ஆனால் மூலப்பிரச்சினை என்ன என்பதைக் கண்டறிந்து அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டும். சிறுவர்களைக் குற்றமிழைப்பதற்குத் தூண்டும் காரணிகள் கண்டறியப்பட்டு, அவற்றை வேருடன் களைவதற்கான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். வழிதவறிப்போன சிறார்களை மீண்டும் பாடசாலைக்குக் கொண்டு வருவதன் மூலமோ அல்லது தொழிற்பயிற்சியை உருவாக்கி வாழ்வாதாரத்துக்கான வழியைக் காட்டுவதன் மூலமோ தான் அவர்களையும் சாதாரண மனிதர்களாக வாழ்க்கையின் ஓட்டத்தோடு இணைத்துக் கொள்ள முடியும். அதை விடுத்து மேலும் சிறார்களைத் தடுப்புக்காவலில் அடைத்து வைப்பதன் மூலம் பிரச்சினைகள் என்றுமே தீரப்போவதில்லை.

இன்னமும் பாற்பற்களைக் கொண்டுள்ள 10 வயது சிறார்களை, இப்போதும் பாலகர்கள் என அடையாளம் காணப்படுவர்களைக் குற்றச்சாட்டுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று எண்ணுவதும் அதற்காக விவாதங்கள் நடப்பதும், அந்த மண்டலத்தின் தலைமைத்துவத்தின் அலட்சியத்தைத்தான் காட்டுகிறது. இத்தனை இளம்வயதில் பிரச்சனையைச் சீர்தூக்கி ஆராய்ந்து தன்னைத் திருத்திக் கொள்ளக்கூடிய மனநிலை சிறார்களுக்கு இருக்கப் போவதில்லை. வெளி உலகத் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில், சீர் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படாத விடத்து உளச்சிதைவு கண்ட நிலையில் மீண்டும் வெளி உலகத்தைக் காணும் இளரத்தத்துக்குப் பழி வாங்கும் உணர்வுடன், எதற்கும் அஞ்சாத மனமும் வந்து விட்டிருக்கும். இதனால் பாதிக்கப்படப்போவது ஒரு சமூகம் மட்டுமல்ல வருங்காலத்தைப் பிரதிநிதிப்படுத்தப் போகும் ஒரு இளம் சமுதாயமும் என்பதை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும். தற்போது வரவுள்ள சட்டத்தினால், துள்ளித் திரிந்து பள்ளியில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய சிறுவர்கள் புரியாத வயதில், விளைவுகளை அறியாமல் செய்யும் தவறினால் தடுப்புக் காவலில் வாடப்போகின்றார்கள்.



**சமூகத்தில் இளம் சிறார்களால் இழைக்கப்படும் குற்றச்செயல்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதால், மக்கள் அச்சத்துடன் வாழும் நிலையில் உள்ளார்கள். மக்கள் பாதுகாப்பான சூழலில் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.**

Spit Hood (துப்புதலைத் தடுக்கும் கவசம்) என்பதையும் மீள அறிமுகப்படுத்தப் போவதான வடக்கு மண்டல அரசாங்கத்தின் அறிவிப்பும் வரவேற்கப்படக் கூடியதல்ல. கதிரையில் கட்டப்பட்ட நிலையில் முகத்தில் போடப்பட்ட இந்தக்கவசத்துடன் சிறுவர் குற்றவாளி ஒருவர் அமர்ந்திருக்கும் நிலையைக் கற்பனை செய்வதே கடினமானதாக இருக்கின்றது. வடக்கு மண்டல சிறுவர்களுக்கான ஆணையாளர் ஷக்லீனா முஸ்க் (Shahleena Musk) வடக்கு மண்டலத்தின் "தண்டனை அடிப்படையிலான கொள்கைகள் பூர்வகுடிக் குழந்தைகள் மற்றும் மக்களுக்கெதிரான ஒரு போர்" என்று வர்ணிக்கின்றார். வெள்ளையினத்தவருக்கும் பூர்வகுடிகளுக்குமிடையேயான இடைவெளியைக் குறைப்பதாகச் சொல்லிக் கொண்டு அதற்கு மாறான நடவடிக்கைகளை எடுப்பது அரசாங்கத்தின் முரணான கொள்கையையே காட்டுகின்றது.

சிறையடைப்பு விகிதங்களைக் குறைத்து, சிறுவர்களை ஆரோக்கியமான மற்றும் நேர்மறையான வாழ்க்கையை வாழ உதவக் கூடிய வழிமுறைகளைக் காட்டினால் மட்டுமே ஆளுமையான சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும். கடந்த காலத் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளாமலும், எதிர்காலம் பற்றிய தொலைநோக்குப் பார்வை இல்லாமலும் மீளவும் சிக்கலான நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய முடிவுகளை அரசாங்கம் எடுத்திருப்பது வருத்தத்திற்குரியதாகும்.

சமூகத்தின் வருங்கால சந்ததியைப் பிரதிநிதிப்படுத்த வேண்டிய சிறுவர்கள், இளம்வயதிலே வாழும் சூழலிருந்து பிரிக்கப்பட்டு அடைத்து வைக்கப்படுவது என்பது ஆரோக்கியமான செயலாக இருக்கப் போவதில்லை. மிருங்கங்களின் வாழ்விடமும் வாழ்வாதாரமும் அழிகின்றது என்பது பற்றிக் கவலை கொள்பவர்கள் சகமனிதர்கள் மற்றும் குழந்தைகள் பற்றிக் கருத்திற் கொள்ளவில்லை என்பது வருத்தத்தைத் தருகின்றது. வடக்கு மண்டலத்தில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சிறைச்சாலை பற்றிய அரச ஆணையத்தின் கண்டுபிடிப்புகள், சிறைச்சாலைகளில் காணப்படும் "மனிதாபிமானமற்ற" நிலைகளை வெளிக்கொண்டு வந்துள்ள நிலையில் பத்து வயதுச் சிறுவர்களைத் தடுப்புக்காவலில் அடைத்து வைப்பது உசிதமான முடிவாகத் தெரியவில்லை. 10 முதல் 14 வயதிற்குள் உள்ள சிறார்களைச் சிறையில் அடைப்பதால், சமுதாய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலோ அல்லது குற்ற எண்ணிக்கையைக் குறைப்பதிலோ எந்த விதமான மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பதை அரசும் அதனுடன் தொடர்பான கட்டமைப்புகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

பாதிக்கப்படும் குழந்தைகளின் மனநிலையை மாற்றவும், சமூகத்தை பாதுகாப்பாக வைத்திருக்கவும் தேவையான பரிந்துரைகளை உள்ளடக்கிய தேசிய குழந்தைகள் ஆணையரின் அறிக்கையான 'Help way earlier!' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையை புதிய வடக்கு மண்டல அரசு படிக்க வேண்டும்" என்று லிடில் என்பவர் வலியுறுத்தியுள்ளார்.

எதை யார் சொன்னாலும் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துக்கு இருக்கும் அதிகாரமே இறுதியில் வெற்றி பெறப் போகின்றது. பூர்வ குடிகள் அதிகளவில் வாழும் வடக்கு மண்டலத்தில் கல்வியறிவையும் குடும்ப நலன்களையும் மேம்படுத்தும் நடவடிக்கை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தீர்வு காணப்பட முடியுமாயின் அதுவே பிரச்சினையை ஆழமாக அணுகுவதாக இருக்கும். மற்றவை யாவும் தற்காலிகத் தீர்வைத் தரமுடியுமே தவிர நிரந்தரத் தீர்வாக இருக்கப்போவதில்லை.

Transco CARGO

THIS YEAR CHRISTMAS WILL BE AWESOME

| Month | Final Cut Off Date | Estimated Arrival Date |
|---|---|---|
| August | 2024 -08 - 03 | 2024 - 09 - 13 |
| August | 2024 - 08 - 10 | 2024 - 09 - 20 |
| August | 2024 - 08 - 17 | 2024 - 09 - 27 |
| August | 2024 - 08 - 24 | 2024 - 10 - 04 |
| August | 2024- 08 - 31 | 2024 - 10 - 11 |
| September | 2024 - 09 - 07 | 2024 - 10 - 18 |
| September | 2024 - 09 - 14 | 2024 - 10 - 25 |
| September | 2024 - 09 - 21 | 2024 - 11 - 01 |
| September | 2024 - 09 - 28 | 2024 - 11 - 08 |
| October | 2024 - 10 - 05 | 2024 - 11 - 15 |
| October | 2024 - 10 - 12 | 2024 - 11 - 22 |
| October | 2024 - 10 - 19 | 2024 - 11 - 29 |
| October | 2024 - 10 - 26 | 2024 - 12 - 06 |
| November | 2024 - 11 - 02 | 2024 - 12 - 13 |
| November | 2024 - 11 - 09 | 2024 - 12 - 20 |
| November | 2024 - 11 - 16 | 2024 - 12 - 27 |
| November | 2024 - 11 - 23 | 2025 - 01 - 03 |
| November | 2024 - 11 - 30 | 2025 - 01 - 10 |
| December | 2024 - 12 - 07 | 2025 - 01 - 17 |
| December | 2024 - 12 - 14 | 2025 - 01 - 24 |
| December | 2024 - 12 - 21 | 2025 - 01 - 31 |



Now We do Air Tickets



Transco TRAVELS

LION XPRESS

Your Essentials to Sri Lanka

Within 7 Days?



45 Adrian Rd, **CAMPBELLFIELD** - (03) 9357 7228
206-208 Discovery Road, **DANDENONG SOUTH** - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU